அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

e-Paper | 26 புதன்கிழமை ஆகஸ்ட் 2026 | 26 Wednesday Augus 2026 | Switzerland Edition

























rib
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
உங்கள் கணக்குகள் –
எங்கள் பொறுப்பு!
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான
நம்பகமான மற்றும் தொழில்முறை
கணக்கியல் சேவைகள்.
கணக்குப் பதிவு – Buchhaltung
வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
MWST / VAT கணக்கீடு
சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
Quellensteuer
நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்
துல்லியம்
•
நம்பிக்கை
•
தனிப்பட்ட சேவை
உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில்
நம்பிக்கையான துணையாக...
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch


நல்லூரின் இதயத்தில்
உலகத் தரச் சொகுசு
அனுபவம்
"WORLD-CLASS
LUXURY
EXPERIENCE
IN THE HEART OF
NALLUR"
SPECIAL
OFFER
10% OFF
Exclusive Offer
Valid Through
31 DECEMBER 2026
Use Promo Code:
CH2026
Suisse
RESIDENCY
SWISS COMFORT, JAFFNA SOUL.
booking@suisseresidency.lk
+94 21 221 08 88
www.suisseresidency.lk
+94 77 877 90 00


NOLIMIT ONE
GmbH
ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND – FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch


தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE




# ஒரே கோடையில் 30,000-க்கும் அதிகமான உயிரிழப்புகள்

ஐரோப்பா முழுவதும் இந்தக் கோடையில் தொடர்ச்சியாக ஏற்பட்ட கடுமையான வெப்ப அலைகள் மற்றும் வறட்சி காரணமாக 30,000-க்கும் அதிகமான கூடுதல் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக ஆரம்பகட்ட புள்ளிவிவரங்கள் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளன.

2026 கோடைக்காலம் ஐரோப்பாவுக்கு மிகக் கடுமையான ஒன்றாக மாறியுள்ளது. ஜூலை நடுப்பகுதி முதல் ஆகஸ்ட் நடுப்பகுதி வரையான காலத்தில் மட்டும் 32,000-க்கும் அதிகமான கூடுதல் மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பாவின் EuroMOMO கண்காணிப்பு அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

AFP தொகுத்த எட்டு நாடுகளின் தேசிய சுகாதாரத் தரவுகளின்படி, வெப்பத்துடன் நேரடியாகத் தொடர்புடைய அல்லது வழக்கத்தைவிட கூடுதலாக ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை சுமார் 33,000 ஆக உள்ளது. இதில் ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

### ஜெர்மனியில் 14,000 உயிரிழப்புகள்

ஜெர்மனியில் ஆகஸ்ட் 9 வரை வெப்ப அலைகளுடன் தொடர்புடைய சுமார் 14,000 மரணங்கள் பதிவாகியுள்ளன. 2016 முதல் இத்தகைய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இது மிக உயர்ந்த எண்ணிக்கையாகும். குறிப்பாக 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### பிரான்ஸில் 7,300-க்கும் அதிகம்

பிரான்ஸில் மே மாத இறுதி முதல் ஜூலை இறுதி வரையான கடுமையான வெப்பக் காலப்பகுதியில் 7,300-க்கும் அதிகமான கூடுதல் மரணங்கள் பதிவாகியுள்ளன. 2026 கோடை, 2003க்குப் பின்னர் அந்நாட்டின் மிகக் கொடிய கோடையாக ஏற்கனவே மாறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஸ்பெயினில் சுமார் 4,500

ஜூன் 1 முதல் ஆகஸ்ட் 19 வரை ஸ்பெயினில் வெப்பத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட சுமார் 4,500 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. ஜூலை மாதம் ஸ்பெயினின் பிரதான நிலப்பரப்பில் பதிவான மிக வெப்பமான ஜூலை மாதங்களில் ஒன்றாக அமைந்தது.

### மற்ற நாடுகளிலும் அதிக உயிரிழப்புகள்

இங்கிலாந்து - 2,877
பெல்ஜியம் - 2,570
நெதர்லாந்து - 968
போர்த்துக்கல் - 600-க்கும் அதிகம்
ஆஸ்திரியா - 396

என ஆரம்பகட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கைகள் பின்னர் திருத்தப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மிகக் கொடிய இரண்டு வாரங்கள்

ஐரோப்பாவில் ஜூன் மாதத்தின் கடைசி வாரம் மிகவும் கொடியதாக அமைந்ததாக தற்போதைய மதிப்பீடுகள் காட்டுகின்றன. அந்த வாரத்தில் மட்டும் சுமார் 16,000 கூடுதல் மரணங்கள் பதிவாகியுள்ளன. அதைத் தொடர்ந்து ஜூலை முதல் வாரத்தில் சுமார் 8,000 கூடுதல் மரணங்கள் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடுமையான வெப்பம் மட்டுமன்றி, நீடித்த வறட்சி பல பகுதிகளில் காட்டுத்தீ அபாயத்தையும் அதிகரித்தது.

### காலநிலை மாற்றத்தின் எச்சரிக்கை

மனிதச் செயல்பாடுகளால் ஏற்படும் காலநிலை மாற்றம் வெப்ப அலைகளை மேலும் அடிக்கடி, நீண்டகாலம் மற்றும் தீவிரமாக மாற்றுவதாக விஞ்ஞானிகள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். ஜூன் இறுதியில் ஏற்பட்ட கடுமையான வெப்ப அலை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட காலநிலை மாற்றம் இல்லாமல் நிகழ்ந்திருக்க வாய்ப்பு மிகக் குறைவு என்று விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

ஐரோப்பாவின் 2026 கோடை ஒரு சாதாரண வெப்பமான கோடையாக இல்லாமல், காலநிலை மாற்றம் மனித உயிர்களுக்கு ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை வெளிப்படுத்தும் மிகப்பெரிய எச்சரிக்கையாக மாறியுள்ளது.




# 2027 முதல் குடும்பங்களுக்கான வருடாந்த கட்டணம் CHF 312; 2029 முதல் CHF 300

Switzerland-ல் குடும்பங்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டாய வானொலி மற்றும் தொலைக்காட்சிக் கட்டணம் படிப்படியாகக் குறைக்கப்படவுள்ளது. தற்போது ஆண்டுக்கு CHF 335 ஆக உள்ள கட்டணம், 2027 ஜனவரி 1 முதல் CHF 312 ஆகவும், 2029 முதல் CHF 300 ஆகவும் குறைக்கப்படும்.

குடும்பங்கள் மற்றும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சுமையைக் குறைப்பதே இந்த மாற்றத்தின் முக்கிய நோக்கம் எனக் கூட்டாட்சி அரசு தெரிவித்துள்ளது.

தொலைக்காட்சி இல்லாவிட்டாலும் கட்டணம் கட்டாயம்

ஒரு வீட்டில் எத்தனை பேர் வசிக்கின்றனர் அல்லது எத்தனை வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொருட்படுத்தாமல், ஒரு குடும்பத்துக்கு ஒரே கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தொலைக்காட்சி, வானொலி அல்லது இணைய வசதியுள்ள சாதனங்களைப் பயன்படுத்தாதவர்களும் பொதுவாக இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். சாதனங்கள் எதுவும் இல்லை எனத் தெரிவித்து விலக்குப் பெறும் நடைமுறை 2024 ஜனவரி 1 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

தனியார் குடும்பங்களிடமிருந்து SERAFE நிறுவனம் இந்தக் கட்டணத்தை வசூலிக்கிறது. வருடாந்திரக் கட்டணத்திற்குப் பதிலாக காலாண்டு அடிப்படையிலும் கட்டணத்தைச் செலுத்த முடியும்.

### *கட்டணத் தொகை எங்கு செல்கிறது?*

இந்தக் கட்டணத்தின் பெரும்பகுதி பொதுச் சேவை ஊடக நிறுவனமான SRG SSR-க்கு வழங்கப்படுகிறது. மேலும், Switzerland-ன் பல்வேறு மொழிப் பிராந்தியங்களில் இயங்கும் தகுதிபெற்ற உள்ளூர் மற்றும் பிராந்திய வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செய்திகள், கல்வி, கலாசாரம் மற்றும் பொது விவகாரங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதே இந்த நிதி முறையின் நோக்கமாகும்.

### *நிறுவனங்களுக்கும் நிவாரணம்*

2027 முதல் VAT பதிவுக்குட்பட்ட நிறுவனங்கள் கட்டணம் செலுத்த வேண்டிய வருடாந்திர வருமான வரம்பு CHF 500,000 இலிருந்து CHF 1.2 மில்லியனாக உயர்த்தப்படும்.

இந்த மாற்றத்தைத் தொடர்ந்து, VAT பதிவுக்குட்பட்ட நிறுவனங்களில் சுமார் 80 சதவீதமானவை வானொலி-தொலைக்காட்சிக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### *யாருக்கு விலக்கு கிடைக்கும்?*

கூட்டாட்சி AHV அல்லது IV துணை நலத்தொகை பெறுபவர் வசிக்கும் குடும்பங்கள், SERAFE நிறுவனத்திடம் விண்ணப்பித்து விலக்குப் பெறலாம்.

கட்டணம் செலுத்த வேண்டிய வேறு நபர் இல்லாத காது-கண் பார்வையற்றவர்களின் குடும்பங்களுக்கும், சட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் சில தூதரகக் குடும்பங்களுக்கும் விலக்கு வழங்கப்படுகிறது.

சமூக உதவித்தொகை மட்டும் பெறுபவர்களுக்கு தனியான விலக்கு வழங்கப்படுவதில்லை.

### *CHF 200 முன்முயற்சி நிராகரிப்பு*

குடும்பங்களுக்கான வருடாந்திர ஊடகக் கட்டணத்தை அதிகபட்சம் CHF 200 ஆகக் குறைக்கக் கோரிய "CHF 200 போதும்" என்ற SRG முன்முயற்சி, 2026 மார்ச் 8 நடைபெற்ற தேசிய வாக்கெடுப்பில் 61.95 சதவீத எதிர்ப்பு வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது.

எனினும் கூட்டாட்சி அரசு ஏற்கெனவே தீர்மானித்துள்ள CHF 312 மற்றும் CHF 300 கட்டணக் குறைப்புகள் திட்டமிட்டபடி நடைமுறைக்கு வரவுள்ளன.

# எதிர்காலத்தில் 44°C வரை வெப்பம்?

## Switzerland-க்கு காத்திருக்கும் கடும் வெப்பமும் வறட்சியும்!



Bern: தற்போது பெய்துவரும் மழையும் குறைந்துள்ள வெப்பநிலையும் 2026 கோடையின் கடுமையான வெப்பத்தை மறக்கச் செய்யலாம். ஆனால் எதிர்காலத்தில் Switzerland இன்னும் அதிக வெப்பம், நீண்ட வெப்ப அலைகள் மற்றும் கடுமையான வறட்சியை எதிர்கொள்ளக்கூடும் என வானிலை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

### 2026 கோடை - ஏற்கனவே கடும் தாக்கம்

2026 ஜூன் 28ஆம் தேதி Bas-el பகுதியில் 39-°C வெப்பநிலை பதிவாகி, Switzerland-இல் ஜூன் மாதத்திற்கான மிக உயர்ந்த வெப்பநிலை சாதனையாக அமைந்தது.

அதன்பின்னரும் பல பகுதிகளில் வெப்பநிலை 30°C-ஐத் தாண்டி நீடித்ததுடன், மழையின்மை காரணமாக விவசாயம், இயற்கை வளங்கள் மற்றும் நீர் விநியோகம் உள்ளிட்ட பல துறைகள் அழுத்தத்தை எதிர்கொண்டன.

### இது ஆரம்பம் மட்டுமா?

MeteoSwiss வெளியிட்டுள்ள காலநிலை மதிப்பீட்டின்படி, எதிர்காலத்தில் கோடைக்காலங்கள் மேலும் வறட்சியானதாக மாறும் வாய்ப்பு உள்ளது.

1980களின் தொடக்கத்திலிருந்து Switzerland-இல் மண்ணின் ஈரப்பதம் சுமார் 5 முதல் 10 சதவீதம் வரை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக வெப்பமயமாதல் தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்தைவிட 3°C உயர்ந்தால், தற்போதைய காலநிலையில் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் அளவிலான கோடை வறட்சி, எதிர்காலத்தில் மூன்று மடங்கு அதிகமாக நிகழக்கூடும்.

### 41-°C முதல் 44-°C வரை?




3°C உலக வெப்பமயமாதல் சூழலில் Switzerland-இன் வெப்பநிலை தற்போதைய நிலையைவிட மேலும் குறிப்பிடத்தக்க அளவில் உயரக்கூடும் என கணிப்புகள் தெரிவிக்கின்றன. தற்போதைய 39°C போன்ற உச்ச வெப்பநிலையை அடிப்படையாகக் கொண்டால், எதிர்கால தீவிர சூழ்நிலைகளில் 41.4°C முதல் 44.1°C வரையிலான வெப்பநிலைகளும் சாத்தியமாகலாம் என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அத்தகைய காலநிலையில் 2026 போன்ற கோடை கூட சாதாரணமானதாகக் கருதப்படும் நிலை உருவாகலாம் என்பது கவலைக்குரிய எச்சரிக்கையாகும்.

### மழையும் குறையலாம்

1991-2020 காலப்பகுதியில் Switzerland-இன் சராசரி கோடை மழைப்பொழிவு சுமார் 420 மில்லிமீட்டர் ஆக இருந்தது.

3°C வெப்பமயமாதல் சூழலில் இது சுமார் 350 மில்லிமீட்டராக குறையக்கூடும் என MeteoSwiss கணித்துள்ளது.

அதிக வெப்பம், குறைந்த மழை மற்றும் அதிக ஆவியாதல் ஆகியவை இணைந்து நிலத்தையும் நீர்வளங்களையும் மேலும் வேகமாக உலரச் செய்யக்கூடும்.

### காட்டுத்தீ அபாயமும் அதிகரிக்கும்

வறட்சி அதிகரிப்பதன் முக்கிய விளைவுகளில் ஒன்று காட்டுத்தீ அபாயமாகும்.

உதாரணமாக குடிணிண பகுதியில் தற்போது ஆண்டுக்கு சுமார் 18 நாட்கள் அதிக காட்டுத்தீ அபாயம் காணப்படும் நிலையில், 3°Cவெப்பமயமாதல் சூழலில் அது 44 நாட்கள் வரை அதிகரிக்கக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

### தயாராகிறதா Switzerland?

எதிர்கால வெப்ப அலைகள், வறட்சி மற்றும் நீர் மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகள் Switzerland அரசியல் மட்டத்திலும் முக்கிய விவாதமாக மாறுகின்றன.

பாடசாலை வகுப்பறைகளை அதிக வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஆசிரியர் அமைப்புகள் கோரி வருகின்றன. மருத்துவமனைகள், பாடசாலைகள், முதியோர் இல்லங்கள் மற்றும் பிற பொதுக் கட்டிடங்களில் குளிரூட்டும் வசதிகளை ஏற்படுத்துவது குறித்த விவாதங்களும் அதிகரித்துள்ளன.

### MeteoSwiss-இன் முக்கிய எச்சரிக்கை:

எதிர்காலத்தில் சராசரியாக கோடைகள் வறட்சியாகும்; ஏற்கனவே வறட்சியான கோடைகள் இன்னும் தீவிரமானதாக மாறும்.




# 75 வயதில் 11,000 கி.மீ. மோட்டார் சைக்கிள் பயணம்

## வாழ்க்கைக் கனவை நிறைவேற்றிய Ueli Schpbach

Switzerland-ஐச் சேர்ந்த 75 வயதான Ueli Schpbach, மோட்டார் சைக்கிளில் சுமார் 11,000 கிலோமீட்டர் பயணம் செய்து, நீண்டகாலமாக மனதில் வைத்திருந்த Nordkap செல்லும் கனவை நிறைவேற்றியுள்ளார்.

Bern மாநிலத்தின் Worb பகுதியைச் சேர்ந்த Ueli Schpbach, தனது மோட்டார் சைக்கிள் நண்பரான Ueli Siegenthaler உடன் நான்கு வாரங்கள் இந்த சாகசப் பயணத்தை மேற்கொண்டார்.

### எட்டு நாடுகளைக் கடந்த பயணம்

இருவரும் Switzerland, Germany, Denmark, Sweden, Norway, Finland, Luxembourg மற்றும் France ஆகிய எட்டு நாடுகளைக் கடந்து சுமார் 11,000 கிலோமீட்டர் பயணித்துள்ளனர்.

பயணத்தின் முக்கிய இலக்காக Norway-யின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள Nordkap இருந்தது. அதிகாலை 3.15 மணியளவில் அங்கு சென்றபோதும் கோடைக்காலத்தின் காரணமாக வெளிச்சமாக இருந்ததாக Schpbach நினைவுகூர்கிறார்.

### இளமையிலிருந்தே இருந்த கனவு

இளம் வயதில் Denmark-ல் பணியாற்றிய அனுபவமும், வடக்கு ஐரோப்பாவுடனான குடும்பத் தொடர்புகளும் Nordkap செல்ல வேண்டும் என்ற ஆசையை அவருக்குள் நீண்டகாலமாக வைத்திருந்தன.

ஓய்வு பெற்ற பின்னர் நீண்ட பயணங்களுக்கு நேரம் கிடைத்ததால், தனது கனவை 75 வயதில் நனவாக்கியுள்ளார்.




### முதல் 12 நாட்களும் மழை

பயணம் ஆரம்பித்த முதல் 12 நாட்களிலும் கிட்டத்தட்ட தொடர்ச்சியாக மழை பெய்துள்ளது. இருந்தபோதிலும் பயணத்தை கைவிடுவது குறித்து ஒருபோதும் சிந்திக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கடும் இடியுடன் கூடிய மழை ஏற்பட்டபோது மட்டும் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். முழுப் பயணத்தையும் விபத்தோ, மோட்டார் சைக்கிள் பழுதோ இல்லாமல் முடித்து இருவரும் Worb திரும்பியுள்ளனர்.

### மறக்க முடியாத இயற்கைக் காட்சிகள்

Norway-யின் Lofoten தீவுகள், Fjord-கள், பனிப்பாறைகள் மற்றும் மலைப்பகுதிகள் இந்தப் பயணத்தின் மறக்க முடியாத அனுபவங்களாக அமைந்ததாக Schpbach கூறுகிறார்.

வழியில் கலைமான்கள் (Reindeer), Moose மற்றும் திமிங்கிலங்களையும் பார்த்துள்ளனர். சில இடங்களில் கலைமான்கள் சாலையை மறித்து நின்றதால் பயணத்தை நிறுத்திக் காத்திருக்க வேண்டியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மறக்க முடியாத விருந்தோம்பல்

ஒரு Camping பகுதியில் கடும் மழையில் தங்கியிருந்தபோது, அங்கிருந்த நிர்வாகி இவர்களிடம் உணவு இருக்கிறதா என்று கேட்டுள்ளார். உணவு இல்லை என்று தெரிவித்ததும், அவர்களுக்கு புதிய மீனை இரவு உணவாக வழங்கியுள்ளார்.

இத்தகைய மனிதநேயமான சந்திப்புகள் பயணம் முழுவதும் கிடைத்ததாக Schpbach நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

### பயணச் செலவு சுமார் 4,000 பிராங்குகள்

இந்த நான்கு வாரப் பயணத்திற்கு சுமார் 4,000 Swiss Francs செலவாகியுள்ளது.

அவர் பயன்படுத்திய 2007 BMW R 1200 GS மோட்டார் சைக்கிள் இதுவரை 100,000 கிலோமீட்டருக்கும் அதிகமாக பயணித்துள்ளது.

75 வயதானாலும் மோட்டார் சைக்கிள் பயணத்தை நிறுத்தும் எண்ணம் Schpbach-க்கு இல்லை. அடுத்ததாக France அல்லது Spain-ஐ சுற்றி ஒரு நீண்ட பயணம் மேற்கொள்ளும் திட்டமும் அவரது மனதில் உள்ளது.

இலக்கை அடைவது மட்டும் முக்கியமல்ல; அந்தப் பயணமே உண்மையான இலக்கு.

என்பதே Nordkap பயணத்திலிருந்து தனக்கு கிடைத்த மிகப்பெரிய அனுபவம் என Ueli Schpbach கூறுகிறார்.




# Switzerland சுகாதார அமைப்பில் மாற்றம் கோரும் SVP உறுப்பினர்

Radiologists-களின் CHF 300,000-க்கும் அதிகமான ஆண்டு வருமானம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், சுகாதாரத் துறையின் செலவுகளைக் கட்டுப்படுத்த புதிய விதிகளை கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை Switzerland நாடாளுமன்றத்தில் வலுப்பெற்றுள்ளது.

Switzerland-இல் சுகாதார காப்பீட்டு பிபீமியங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மருத்துவத் துறையில் வழங்கப்படும் அதிக சம்பளம் மற்றும் தவறான நிதி ஊக்கங்கள் குறித்து அரசியல் மட்டத்தில் புதிய விவாதம் எழுந்துள்ளது.

குறிப்பாக சில Radiologists ஆண்டுக்கு CHF 300,000-க்கும் அதிகமாக சம்பாதிப்பதாக வெளியான தகவல்கள் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளன.

SVP தேசிய சபை உறுப்பினர் Rmy Wyssmann, கட்டாய காப்பீட்டு பிபீமியங்கள் மற்றும் வரிப்பணத்தின் மூலம் இயங்கும் சுகாதார அமைப்பில் சில தனியார் நிறுவனங்கள் அதிக இலாபம் பெறுவதாக விமர்சித்துள்ளார்.

Public pays, private profits என அவர் தற்போதைய நிலையை வர்ணித்துள்ளார்.

சுகாதார காப்பீட்டு நிறுவனங்கள் மருத்துவ சேவை வழங்குநர்களுடன் விலைகளை நேரடியாக பேசி நிர்ணயிக்கக்கூடிய புதிய முறையை அவர் ஆதரிக்கிறார். இது தொடர்பான அவரது Motion நாடாளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது Volksinitiative – மக்கள் முன்முயற்சி ஒன்றை ஆரம்பிப்பது குறித்து அவர் பரிசீலித்து வருகிறார்.

இதற்கிடையில் குக தேசிய சபை உறுப்பினர் Sarah Wyss, அதிக மருத்துவ சேவைகளை வழங்குவதன் மூலம் அதிக வருமானம் பெறும் தற்போதைய ஊக்க முறைகளை மாற்ற வேண்டும் என்றும், சில Bonus முறைகளைத் தடை செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

எஃக தேசிய சபை உறுப்பினர் Patrick Hssig-வும் மருத்துவர்களின் அதிக வருமானத்தை மட்டும் இலக்காகக் கொள்ளாமல், அதிகமான அல்லது அதிக இலாபம் தரும் சிகிச்சைகளை ஊக்குவிக்கும் கட்டண முறைகளை மாற்றுவது முக்கியம் என தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான சுகாதார காப்பீட்டு பிபீமியங்கள் அறிவிக்கப்படவுள்ள நிலையில், மருத்துவச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அரசியல் அழுத்தம் மேலும் அதிகரித்து வருகிறது.

SAVE THE DATE

# வெள்ளிவீதி

## இலக்கியக் கூடுகை 2

# 01.11.2026

SUNDAY

ZURICH, SWITZERLAND

நூல்கள்

எழுத்தாளர்கள்

மொழிபெயர்ப்பாளர்கள்

ஆற்றுகைக் கலைஞர்கள்

வாசகர்கள்

## முழுநாள் அரங்கு

தகவல்களுக்கும், தங்குமிட ஏற்பாடுகளுக்கும்

WHATSAPP ONLY | +41 79 519 24 29

SAYANTHAN / KABILAN




# Zuerich பொலிஸாருக்கு AI மூலம் கண்காணிக்க புதிய அதிகாரம்

குற்றச்சந்தேகம் உருவாகும் முன்பே சில சூழ்நிலைகளில் டிஜிட்டல் விசாரணைகளை மேற்கொள்ளவும், செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் தனிநபர் தரவுகளை பகுப்பாய்வு செய்யவும் Zürich பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் பொலிஸ் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

Zürich மாநில நாடாளுமன்றத்தில் பல மணி நேர விவாதத்திற்குப் பின்னர் SVP, FDP, GLP, Mitte மற்றும் EVP கட்சிகளின் ஆதரவுடன் இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. SP, Grüne மற்றும் AL கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

புதிய சட்டத்தின் கீழ், தொடர் குற்றங்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள், பயங்கரவாதம் மற்றும் இணையக் குற்றங்கள் போன்றவற்றை முன்கூட்டியே கண்டறிவதற்காக பொலிஸார் பெருமளவு தரவுகளை AI அடிப்படையிலான பகுப்பாய்வு அமைப்புகள் மூலம் ஆய்வு செய்ய முடியும்.

மேலும், தீவிரமான அபாயத்திற்கான அறிகுறிகள் இருந்தால், குறிப்பிட்ட குற்றச்சந்தேகம் இல்லாத நிலையிலும் டிஜிட்டல் விசாரணைகளை ஆரம்பிக்க முடியும். நீதிமன்ற அனுமதியுடன் மூடப்பட்ட இணைய Forum-களிலும் விசாரணை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

பொலிஸ் துறைகளுக்கு இடையிலான தானியங்கி தரவுப் பரிமாற்றமும் விரிவுபடுத்தப்படுகிறது. இதன் மூலம் பிற மாநிலங்கள் மற்றும் கூட்டாட்சி அமைப்புகளுடன் தகவல்களை விரைவாகப் பகிர முடியும்.

வீதிகளில் மேற்கொள்ளப்படும் Video கண்காணிப்பிலும் மாற்றம் கொண்டுவரப்படுகிறது. நபர்கள் அல்லது சொத்துகளுக்கு ஆபத்து இருப்பதற்கான தீவிர அறிகுறிகள் ஏற்பட்டால், உயர்தர Video பதிவுகளை குறிப்பிட்ட காலத்திற்கு ஆய்வு செய்ய பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்படும். எனினும் நேரடி முக அடையாளக் கண்காணிப்பு (Real-time Facial Recognition) தொடர்ந்து தடை செய்யப்பட்டிருக்கும்.

எதிர்க்கட்சிகள் இந்த மாற்றங்கள் பொதுமக்களின் தனியுரிமை மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும், குற்றச்சந்தேகம் இல்லாமல் பெருமளவு தகவல்களைச் சேகரிக்கும் நிலைக்கு வழிவகுக்கலாம் என்றும் எச்சரித்துள்ளன.

இதனை நிராகரித்த Zürich பாதுகாப்புத் துறை தலைவர் Mario Fehr, புதிய அதிகாரங்கள் கடுமையான குற்றங்களைத் தடுப்பதற்காகவே பயன்படுத்தப்படும் என்றும், தேவையான இடங்களில் நீதிமன்றக் கண்காணிப்பு இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

திருத்தப்பட்ட சட்டம் இன்னும் இறுதி சட்ட நடைமுறைகளை கடக்க வேண்டியுள்ளது. அதன் பின்னர் அது விருப்ப வாக்கெடுப்புக்கு (fakultatives Referendum) உட்படுத்தப்பட வாய்ப்புள்ளது.





# 2.5 மில்லியன் வெளிநாட்டவர்கள் வாழும் Switzerland ; அவர்களின் பிரபலமான பெயர்கள் என்ன?

Switzerland-இல் சுமார் 2.5 மில்லியன் வெளிநாட்டு குடிமக்கள் வாழும் நிலையில், அவர்களிடையே அதிகம் காணப்படும் பெயர்கள் குறித்த சுவாரஸ்யமான புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன.

Switzerland முழு மக்கள்தொகையையும் எடுத்துக்கொண்டால், பெண்களில் Maria - 71,873 பேர், ஆண்களில் ஈச்ணடினுடு - 63,013 பேர் என்ற பெயர்களே முதலிடத்தில் உள்ளன. குறிப்பாக Maria, Switzerland-இன் நான்கு மொழிப் பிராந்தியங்களிலும் பெண்களுக்கான மிகவும் பொதுவான பெயராக உள்ளது.

அதேவேளை, வெளிநாட்டு சமூகங்களின் பெயர்கள் அவர்களது பூர்வீக நாடுகளைப்





பொறுத்து பெரிதும் மாறுபடுகின்றன. Fatime, Mehmet, Olena போன்ற பெயர்களும் Switzerland-இன் பல்வேறு குடியேற்ற சமூகங்களை பிரதிபலிக்கும் முக்கிய பெயர்களாக இடம்பெறுகின்றன.

2025ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகளில் பெண்களுக்கு Sofia, ஆண்களுக்கு Noah மிகவும் பிரபலமான பெயர்களாக இருந்தாலும், மொத்த மக்கள்தொகையில் அவை இன்னும் முதலிடத்தை எட்டவில்லை. 2025 இறுதியில் 9,679 So-f-ia மற்றும் 13,238 Noah பெயருடையவர்கள் Switzerland-இல் இருந்தனர்

# மலிவு SBB ரயில் டிக்கெட் மோசடி




## Zuerich பொலிஸ் எச்சரிக்கை

Switzerland-இல் குறைந்த விலையில் SBB ரயில் டிக்கெட்டுகள் கிடைப்பதாகக் கூறி, பயணிகளின் வங்கி அட்டைத் தகவல்களைத் திருடும் போலி இணையதளம் குறித்து Zürich மாகாண பொலிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிகாரப்பூர்வ SBB இணையதளத்தைப் போன்ற தோற்றத்தில் இந்த போலி தளம் உருவாக்கப்பட்டுள்ளது. Google தேடல் முடிவுகள் அல்லது Email, SMS போன்றவற்றில் அனுப்பப்படும் Phishing இணைப்புகள் மூலம் பயணிகள் இந்தத் தளத்திற்குள் அழைத்துச் செல்லப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலி இணையதளத்தில் ரயில் புறப்படும் நேரம், நடைமேடை, பயண வழித்தடம் போன்ற தகவல்கள் உண்மையான SBB தகவல்களைப் போலவே காட்டப்படுகின்றன. முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுகளையும் தெரிவு செய்ய முடியும். குறிப்பாக, வழக்கத்தைவிட மிகவும் குறைந்த விலையில் டிக்கெட்டுகள் வழங்கப்படுவதாகக் காட்டப்படுவதால் பயணிகள் எளிதில் நம்பிவிடும் அபாயம் உள்ளது.

டிக்கெட்டை வாங்க முற்படும்போது போலியான கட்டணப் பக்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, Credit/Debit Card எண், காலாவதி தேதி மற்றும் Security Code உள்ளிட்ட தகவல்கள் பெறப்படுகின்றன. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி மோசடியான பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படலாம்.

பயணிகள் SBB இணைய முகவரியை நேரடியாக Browser-ல் உள்ளிடுமாறும் அல்லது அதிகாரப்பூர்வ SBB App-ஐ பயன்படுத்துமாறும் Zürich பொலிஸ் அறிவுறுத்தியுள்ளது. பணம் செலுத்துவதற்கு முன்னர் இணைய முகவரியை முழுமையாகச் சரிபார்ப்பதும் முக்கியம்.

ஏற்கனவே போலி தளத்தில் வங்கி அட்டைத் தகவல்களை வழங்கியவர்கள் உடனடியாக தங்களது வங்கியைத் தொடர்புகொண்டு Credit/Debit Card-ஐ முடக்க வேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா



# நியூசிலாந்து தேர்தலில் ‘வுரீ பாலஸ்தீன்’ : மாவோரி மண்ணில் ஒலிக்கும் பாலஸ்தீன குரல்!

நியூசிலாந்தின் 2026 பொதுத் தேர்தல் அரசியல் களத்தில் புதிய திருப்பமாக ‘Free Palestine’ (வுரீ பாலஸ்தீன்) என்ற அரசியல் கட்சி அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நியூசிலாந்து தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வப் பதிவின்படி, இந்தக் கட்சி 2026 ஆகஸ்ட் 5ஆம் தேதி அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது. இதன் மூலம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சி வாக்குக்காகப் போட்டியிடவும், வாக்குச் சீட்டில் கட்சியின் பெயர் இடம்பெறவும் சட்டபூர்வமான வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த புதிய சிறிய அரசியல் கட்சி உருவானது என்ற செய்தியைத் தாண்டி முக்கியத்துவம் பெறுகிறது. பாலஸ்தீனப் பிரச்சினை சர்வதேச இராஜதந்திரம், மனித உரிமைகள், போர் மற்றும் சர்வதேச சட்டம் ஆகியவற்றின் விவகாரமாக மட்டுமல்லாமல், ஒரு நாட்டின் உள்நாட்டு தேர்தல் அரசியலின் மையப் பிரச்சினையாகவும் மாறி வருகிறது என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டாக இது பார்க்கப்படுகிறது.

### *கட்சி உருவானதன் பின்னணி*

‘Free Palestine’ கட்சி உருவானதன் அடிப்படை நோக்கம் பாலஸ்தீன மக்களின் உரிமைகள், காசா போர், சர்வதேச சட்டம் மற்றும் நியூசிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை ஆகியவற்றை தேர்தல் விவாதத்தின் முன்னணிக்குக் கொண்டு வருவதாகும். கட்சியை உருவாக்கியவர்களின் ஆரம்ப விளக்கங்களின்படி, அதன் நோக்கம் உடனடியாக ஆட்சியைக் கைப்பற்றுவது மட்டுமல்ல; பாலஸ்தீனப் பிரச்சினை குறித்து நியூசிலாந்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அரசியல் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற வேட்பாளர்களை இந்த விவகாரத்தில் தெளிவான நிலைப்பாடு எடுக்கச் செய்வதுமாகும். கட்சி உருவாக்கத்திற்கான பிரச்சாரத்தில், அதிகாரத்தைப் பெறுவது அல்ல; விழிப்புணர்வை உருவாக்குவதே நோக்கம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது.

சமூக ஊடகங்களில் பரவும் தகவல்களில்




பால் ஹாப்ஸன் (Paul Hobson) கட்சியின் நிறுவனர் மற்றும் தலைவர் என குறிப்பிடப்பட்டாலும், நியூசிலாந்து தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வப் பதிவில் தற்போது கட்சியின் செயலாளராக John Edmundson குறிப்பிடப்படுகிறார். அதிகாரப்பூர்வப் பதிவில் பால் ஹாப்ஸன் கட்சித் தலைவராக உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே அந்தக் கூற்றை உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரப்பூர்வத் தகவலாகக் குறிப்பிடுவதில் எச்சரிக்கை தேவை.

***சட்டபூர்வமான பதிவு ஏன் முக்கியம்?***

நியூசிலாந்தின் தேர்தல் முறை MMP (Mixed Member Proportional Representation) என்ற கலப்பு விகிதாசார முறையை அடிப்படையாகக் கொண்டது. இந்த அமைப்பில் ஒரு கட்சி தேர்தலில் தனது கட்சி வாக்கின் மூலம் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற முடியும்.

ஆனால் பதிவு செய்யப்படாத கட்சிக்கும் தொகுதிகளில் தனிப்பட்ட வேட்பாளர்களை நிறுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பதிவு செய்யப்பட்ட கட்சிக்கு மிக முக்கியமான கூடுதல் உரிமை என்னவென்றால், அது கட்சி வாக்கில் போட்டியிடவும், கட்சிப் பட்டியல் வேட்பாளர்களை நிறுத்தவும், அதன் பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட லோகோ வாக்குச் சீட்டில் இடம்பெறவும் முடியும். இதனால் 'Free Palestine' கட்சியின் பதிவு ஒரு குறியீட்டு வெற்றியாக மட்டும் இல்லாமல், தேர்தல் அரசியலில் உண்மையான இடத்தைப் பெற்றுக்கொள்ளும் முதல் சட்டபூர்வமான படியாகும்.

ஒரு அரசியல் கட்சியைப் பதிவு செய்ய நியூசிலாந்து தேர்தல் சட்டத்தின் கீழ் குறைந்தது 500 பணம் செலுத்தும் உறுப்பினர்கள், அவர்கள் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாக இருப்பதற்கான ஆதாரம் உள்ளிட்ட பல நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். 'Free Palestine' இயக்கம் 2026 நடுப்பகுதியில் இந்த 500 உறுப்பினர் இலக்கை அடைவதற்காக தீவிரமாக பிரச்சாரம் செய்தது. பாலஸ்தீன ஆதரவு அமைப்புகளும் இந்த முயற்சிக்கு ஆதரவு திரட்டின.

இதன் மூலம் கட்சியின் உருவாக்கம் ஒரு திடீர் அறிவிப்பின் விளைவு அல்ல; குறைந்தபட்ச உறுப்பினர் ஆதரவை உருவாக்கி, தேர்தல் ஆணையத்தின் பரிசோதனை மற்றும் பொதுக் கருத்துக் கேட்பு ஆகியவற்றை கடந்து வந்த அரசியல் முயற்சி என்பது தெளிவாகிறது.

'Free Palestine' என்ற பெயர் வாக்குச் சீட்டில் இடம்பெறுவது அதன் ஆதரவாளர்களுக்கு மிகப்பெரிய அரசியல் முக்கியத்துவம் கொண்டது. ஒரு வாக்காளர் தேர்தல் நாளில் வாக்குச் சீட்டை பார்க்கும்போது, தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், வீடமைப்பு, சுகாதாரம் போன்ற உள்நாட்டு விவகாரங்களுடன் பாலஸ்தீனப் பிரச்சினையும் நேரடியாக ஒரு அரசியல் தேர்வாகக் காட்சியளிக்கும். இதுவே கட்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகத் தெரிகிறது. பாலஸ்தீனப் பிரச்சினை வெறும் வெளிநாட்டுக் கொள்கை விவகாரமாக அல்லாமல், நியூசிலாந்து எந்த வகையான சர்வதேச அரசியலை




ஆதரிக்க வேண்டும்? என்ற உள்நாட்டு அரசியல் கேள்வியாக மாற்றப்படுகிறது.

*கட்சியின் அரசியல் நிலைப்பாடு*:

கட்சியின் வெளியிடப்பட்ட கொள்கைகளில் பாலஸ்தீன அகதிகளின் மீள்வருகைக்கு ஆதரவு, சர்வதேச சட்டத்தின் கீழ் போர்க்குற்றங்கள் மற்றும் தீவிர சர்வதேச குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறல், மேலும் அமெரிக்காவுடனான முறையான பாதுகாப்பு கூட்டணியிலிருந்து விலகி சுயாதீனமான நியூசிலாந்து வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்ற நிலைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இதனால் இந்தக் கட்சியை வெறும் ஒரே பிரச்சினை கட்சி என்று மட்டும் பார்க்க முடியாது. பாலஸ்தீனத்தை மையமாகக் கொண்டிருந்தாலும், அது நியூசிலாந்தின் பாதுகாப்பு, அமெரிக்காவுடனான உறவு, சர்வதேச சட்டம் மற்றும் வெளிநாட்டுக் கொள்கை ஆகிய பரந்த கேள்விகளையும் முன்வைக்கிறது.

'Free Palestine' கட்சிக்கு நாடாளுமன்றத்தில் இடம் கிடைக்குமா என்பதை தற்போதே கணிக்க முடியாது. சிறிய கட்சிகளுக்கு MMP முறையில் நாடாளுமன்ற நுழைவு கடினமானதாக இருக்கலாம். கட்சி வாக்கின் மூலம் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு தேவையான தேர்தல் ஆதரவைப் பெறுவது மிகப்பெரிய சவாலாக இருக்கும். ஆனால் நாடாளுமன்ற இடம் பெறாவிட்டாலும், அந்தக் கட்சி தேர்தல் விவாதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக பசுமைக் கட்சி, தொழிலாளர் கட்சி, மாவோரி அரசியல் இயக்கங்கள் மற்றும் இடதுசாரி வாக்காளர்கள் மத்தியில் பாலஸ்தீன விவகாரத்திற்கான ஆதரவு எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பது முக்கியமாகும். 'Free Palestine' கட்சி பெறும் வாக்குகள் பெரிய கட்சிகளின் கொள்கை மாற்றங்களுக்கு அழுத்தம் ஏற்படுத்துமா என்பதும் தேர்தலுக்குப் பிறகு கவனிக்க வேண்டிய அம்சமாகும்.

கட்சிப் பெயர் பதிவு செய்யப்பட்டாலும், அதன் லோகோ பதிவு தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல் ஆணையத்தின் செயல்முறையில் கட்சிப் பெயர் மற்றும் லோகோ தனித்தனியாக பரிசீலிக்கப்படுகின்றன. ஆரம்ப விண்ணப்பத்தில் 'Free Palestine' பெயருடன் லோகோவும் முன்வைக்கப்பட்டது.

பின்னர் பெயர் பதிவு செய்யப்பட்டபோதிலும், சின்னம் தொடர்பான முடிவு வேறுபட்டதாக இருந்தது. இது தேர்தல் ஆணையம் அரசியல் கருத்தை ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பதல்ல; வாக்குச் சீட்டில் பயன்படுத்தப்படும் அடையாளங்கள் சட்டத்தின் குறிப்பிட்ட விதிகளுக்கு உட்பட்டவையா என்பதே அதன் சட்டபூர்வப் பரிசீலனையாகும்.

*அதிகாரப்பூர்வ தேர்தல் நிதி ஒதுக்கீடு*

மற்றொரு சுவாரஸ்யமான அம்சம் தேர்தல் ஒளிபரப்பு நிதியாகும். 2026 பொதுத் தேர்தலுக்காக Free Palestine' கட்சிக்கும் NZ$78,887 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கட்சி அப்போது பதிவு செய்யப்படாத




நிலையில் தகுதிபெற்றிருந்த ஆரம்ப ஒதுக்கீட்டு நடைமுறையின் ஒரு பகுதியாகும்; பின்னர் கட்சி பதிவு செய்யப்பட்டதால் தேர்தல் பிரச்சாரத்தில் சட்டபூர்வமான ஒளிபரப்பு வளத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த நிதியைாா தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய விளம்பரங்களின் தயாரிப்பு மற்றும் தேர்தல் பிரச்சாரச் செலவுகளுக்கு பயன்படுத்த முடியும். ஆனால் சிறிய கட்சிக்கு இது கணிசமான பிரச்சார வாய்ப்பாகும்.

நியூசிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கைக்கு கேள்வி எழுந்துள்ளது.

'Free Palestine' கட்சியின் தோற்றம் நியூசிலாந்தின் நீண்டகால வெளிநாட்டுக் கொள்கை பற்றிய விவாதத்தையும் தீவிரப்படுத்தக்கூடும்.

நியூசிலாந்து பொதுவாக மனித உரிமைகள், சர்வதேச சட்டம் மற்றும் பல்தரப்பு இராஜதந்திரத்தை வலியுறுத்தும் நாடாக தன்னை முன்னிறுத்துகிறது. ஆனால் அதே நேரத்தில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் பிற மேற்கு நாடுகளுடன் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு உறவுகளையும் கொண்டுள்ளது.

இதனால் பாலஸ்தீன விவகாரம் நியூசிலாந்திற்கு ஒரு வெளிப்புறப் பிரச்சினை மட்டுமல்ல. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய கூட்டாளிகளுடனான உறவுகளுக்கும், சுயாதீனமான வெளிநாட்டுக் கொள்கைக்கும் இடையிலான சமநிலை எங்கே இருக்க வேண்டும் என்ற கேள்வியையும் அது எழுப்புகிறது.

'Free Palestine' கட்சியின் அதிகாரப்பூர்வ பதிவு நியூசிலாந்து அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது. 2026 பொதுத் தேர்தலில் இந்தக் கட்சி எத்தனை வாக்குகளைப் பெறும், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுமா என்பது இப்போது தெரியாது.

ஆனால் அதன் அரசியல் தாக்கத்தை வெறும் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையால் மட்டும் அளவிட முடியாது. ஒரு சிறிய அரசியல் இயக்கம், பாலஸ்தீனப் பிரச்சினையை வாக்குச் சீட்டின் நேரடி அரசியல் கேள்வியாக மாற்றியுள்ளது. காசா போர், பாலஸ்தீன மக்களின் உரிமைகள், சர்வதேச சட்டம், போர்க்குற்றப் பொறுப்புக்கூறல் மற்றும் நியூசிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை ஆகியவை இனி அரசியல் கட்சிகளுக்கிடையிலான தேர்தல் விவாதத்தின் ஒரு பகுதியாக மாறக்கூடும்.

இதனால் 'Free Palestine' கட்சியின் உண்மையான தாக்கம் அது பெறும் நாடாளுமன்ற ஆசனங்களில் மட்டுமல்ல; மற்ற கட்சிகள் பாலஸ்தீனப் பிரச்சினையில் தங்கள் கொள்கையை எவ்வாறு விளக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றன என்பதிலும் இருக்கலாம். 2026 நியூசிலாந்து தேர்தல், எனவே, ஒரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் மட்டுமல்ல; நியூசிலாந்து உலக அரசியலில் எந்த மதிப்புகளின் அடிப்படையில் தனது குரலை முன்வைக்க விரும்புகிறது என்பதற்கான ஒரு முக்கியமான அரசியல் சோதனையாகவும் அமையக்கூடும்.


TAMINAA
AYURVEDIC WELLNESS
Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,
Rückenschmerzen, Nackenschmerzen,
Schlafprobleme
DISCOUNT 25% OFF
BEST PRICE TREATMENT
Krankenkasse anerkannt!
Rückenschmerzen/ Nackenschmerzen
Stress
Migräne/ Kopfschmerzen
Entspannung
Migränelindernde
Stressabbau
Nacken/Rückenschmerzen
Schlafqualität
Buchen Sie jetzt und erhalten Sie
25 % Rabatt für November!
Nur für Sie!
Buchen Sie noch heute Ihren Termin!
+41 79 940 15 10
taminaa.ch
Zähringerstrasse 32 | 8001 Zürich
Krankenkasse anerkannt!
WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL
ZUHAUSE Hausbesuch
BÜRO Firmenbesuch
HOTEL Hotelbesuch
+41 79 940 15 10 | taminaa.ch | Zähringerstrasse 32 8001 Zürich
TAMINAA – Ihre Gesundheit in besten Händen


சுபீட்சம்
பத்திரிகை
வேதாந்தி : 004178 6264375
supeedsam@gmail.com
வாரத்தில்ஒருமுறை
உங்கள் கரங்களில்
மின்னிதழாக...
சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில்
இணைய இங்கே தொடவும்....
CLICK HERE



# Switzerland செப்டம்பர் 2026 வாக்கெடுப்பு முதல் மருத்துவக் காப்பீடு வரை

எதிர்வரும் செப்டம்பர் மாதம் Switzerland-இல் அரசியல், குடியேற்றம் மற்றும் குடும்பச் செலவுகள் தொடர்பான பல முக்கிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. குறிப்பாக செப்டம்பர் 27 தேசிய வாக்கெடுப்பும், 2027 -ஆம் ஆண்டுக்கான சுகாதாரக் காப்பீட்டு பிரீமியம் அறிவிப்பும் பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கவுள்ளன.

**செப்டம்பர் 14 - நாடாளுமன்ற கூட்டத்தொடர்**

Switzerland நாடாளுமன்றத்தின் இலையுதிர்கால கூட்டத்தொடர் செப்டம்பர் 14 ஆரம்பமாகிறது. வெப்பஅலை, வறட்சி மற்றும் எதிர்கால நீர் மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகள் முக்கிய விவாதங்களில் இடம்பெறவுள்ளன.

Switzerland--EU எதிர்கால ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய குடியேற்றக் கட்டணம் (Immigration levy) குறித்த யோசனையும் அரசியல் விவாதத்திற்கு வரவுள்ளது.

இந்த யோசனை நடைமுறைக்கு வந்தால், வேலைக்காக Switzerland வரும் வெளிநாட்டவர்களுக்கான கட்டணத்தை முதலாளிகள் செலுத்த வேண்டியிருக்கலாம். குடும்ப இணைப்பின் கீழ் வரும் சில பெரியவர்களுக்கும் கட்டணம் விதிக்கப்படலாம்.

**செப்டம்பர் 23 - இலையுதிர்காலம் ஆரம்பம்**

செப்டம்பர் 23 அன்று நிகழும் Autumnal Equinox உடன் வடக்கு அரைக்கோளத்தில் இலையுதிர்காலம் அதிகாரப்பூர்வமாக ஆரம்பமாகிறது. Switzerland-இல் இது அதிகாலை 2.05 மணியளவில் நிகழும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செப்டம்பர் 27 - இரண்டு தேசிய வாக்கெடுப்புகள்**

Switzerland மக்கள் செப்டம்பர் 27 அன்று இரண்டு முக்கிய முன்முயற்சிகள் குறித்து வாக்களிக்கவுள்ளனர்.

நடுநிலைமை முன்முயற்சி (Neutrality



Initiative): Switzerland-இன் நடுநிலைக் கொள்கையை அரசியலமைப்பில் மேலும் உறுதிப்படுத்துவதுடன், நேரடித் தாக்குதல் போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர NATO உள்ளிட்ட இராணுவக் கூட்டணிகளில் நாடு இணைவதைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். பொருளாதாரத் தடைகள் விதிப்பதிலும் கூடுதல் கட்டுப்பாடுகளை ஆதரவாளர்கள் கோருகின்றனர்.

உணவு முன்முயற்சி (Food Initiative): மக்களுக்கு போதுமான அளவில் தரமான, மலிவு விலையிலான உணவு தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இந்த முன்முயற்சி வலியுறுத்துகிறது. உள்நாட்டு விவசாயம், சுற்றுச்சூழல், உயிரினப் பன்மை மற்றும் குடிநீர் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

தற்போதைய கருத்துக்கணிப்புகளின்படி, இரண்டு முன்முயற்சிகளும் நிராகரிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**செப்டம்பர் இறுதியில் - மருத்துவக் காப்பீட்டு பிரீமியம்**

செப்டம்பர் இறுதியில் Federal Office of Public Health (FOPH), 2027-ஆம் ஆண்டுக்கான கட்டாய சுகாதாரக் காப்பீட்டு பிபீமியங்களை அறிவிக்கவுள்ளது.

Comparis மதிப்பீட்டின்படி, நாடு முழுவதும் பிபீமியங்கள் சராசரியாக 3.7 சதவீதம் அதிகரிக்கக்கூடும். இருப்பினும் சில மாகாணங்களில் இதைவிட அதிகமான உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனால் 2027-இல் குடும்பங்களின் மாதாந்திர செலவுகளில் சுகாதாரக் காப்பீடு மீண்டும் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

**நூறூரிச்: 400 கிலோ இலவச கழிவு கூப்பன் மீண்டும் வருமா?**

Zrich நகரில் மறுசுழற்சி நிலையங்களில் ஆண்டுக்கு 400 கிலோ வரை பெரிய கழிவுகளை இலவசமாக அகற்றுவதற்கான கூப்பன் வசதி 2025ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இதற்கு எதிராக Swiss People's Party (SVP) முன்னெடுத்த மக்கள் முன்முயற்சிக்கு தேவையான கையெழுத்துகள் கிடைத்துள்ளன.

இதனால், இந்த இலவச கழிவு கூப்பன்களை மீண்டும் வழங்க வேண்டுமா என்பதை Zrich நகர மக்கள் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கவுள்ளனர்.

வாக்கெடுப்பு நடைபெறும் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# வீட்டை இடித்தால் மாகாணம் பணம் வழங்கும்!

## Switzerland இல் புதிய இடிப்பு ஊக்கத்தொகை திட்டம்

Bern: Switzerland இல் கட்டுமான மண்டலங்களுக்கு (Bauzone) வெளியே உள்ள பழைய வீடுகள், கால்நடை கொட்டகைகள் உள்ளிட்ட கட்டிடங்களை தன்னார்வமாக இடித்து அகற்றும் உரிமையாளர்களுக்கு மாகாணங்கள் பண உதவி வழங்கவுள்ளன.

2025ஆம் ஆண்டு நாடாளுமன்றம் அங்கீகரித்த "Abbruchprmie' எனப்படும் இடிப்பு ஊக்கத்தொகைத் திட்டம், பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் கட்டிடங்களை அகற்றுவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

Switzerland முழுவதும் சுமார் 40,000 முதல் 100,000 கட்டிடங்கள் இத்திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய நிலையில் இருப்பதாக நாடாளுமன்ற விவாதத்தின்போது மதிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக ஆண்டுக்கு 20 முதல் 65 மில்லியன் பிராங்குகள் வரை செலவாகலாம் என மத்திய அரசு கணித்துள்ளது.

### மாகாணத்துக்கு மாகாணம் தொகை மாறுபடும்

சூரிச் (Zrich) மாகாணத்தில் தனி மர வீடுகளுக்கு ஒரு சதுர மீட்டருக்கு 30-33 பிராங்குகள் வரையும், கால்நடை கொட்டகைகளுக்கு 24-25 பிராங்குகள் வரையும் வழங்கப்படலாம்.

St. Gallen மாகாணத்தில் வீடுகளுக்கு சதுர மீட்டருக்கு 32-40 பிராங்குகள், கொட்டகைகளுக்கு 15-35 பிராங்குகள் வழங்கப்படுகின்றன.

Aargau மாகாணத்தில் வீடுகளுக்கு 35 பிராங்குகளும், கொட்டகைகளுக்கு 20 பிராங்குகளும் வழங்கப்படும். Luzern மாகாணத்தில் வீடுகளுக்கு சதுர மீட்டருக்கு 40 பிராங்குகள் வரை கிடைக்கலாம்.

Schaffhausen மாகாணத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒரே தொகைக்குப் பதிலாக, சமர்ப்பிக்கப்படும் இடிப்பு செலவு மதிப்பீடுகளின்



அடிப்படையில் ஊக்கத்தொகை தீர்மானிக்கப்படும்.

### எல்லா வீடுகளுக்கும் பணம் கிடைக்காது

இந்தத் திட்டத்தில் முக்கிய நிபந்தனை ஒன்று உள்ளது. கட்டிடம் ஆச்தத்ணிணனு எனப்படும் கட்டுமான மண்டலத்திற்கு வெளியே அமைந்திருக்க வேண்டும். கட்டுமான மண்டலத்திற்குள் உள்ள சாதாரண வீடுகளை இடிப்பதற்கு இந்த ஊக்கத்தொகை கிடைக்காது. பல மாகாணங்கள் 2027 முதல் இந்த ஊக்கத்தொகையை வழங்கத் தொடங்கவுள்ளன. ஆனால் Bern மாகாணத்தில் 2026ஆம் ஆண்டிலேயே திட்டம் நடைமுறையில் உள்ளது.

வீட்டை அல்லது பழைய விவசாயக் கட்டிடத்தை இடிக்கத் திட்டமிடுவோர், நடவடிக்கை எடுப்பதற்கு முன் தங்களது மாகாணத்தின் விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப நடைமுறைகளைச் சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்

# சூரிச் மாகாணத்தில் வீடுகளுக்குத் தொடரும் கடும் தட்டுப்பாடு

## காலி வீடுகள் வெறும் 0.52% - வாடகை வீடு தேடுவோருக்கு கடும் போட்டி



சூரிச்: Switzerland இன் அதிக மக்கள் தொகை கொண்ட சூரிச் மாகாணத்தில் வீடு அல்லது அடுக்குமாடிக் குடியிருப்பு கிடைப்பது தொடர்ந்து கடினமாகவே உள்ளது. 2026ஆம் ஆண்டில் காலியாக உள்ள வீடுகளின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ள போதிலும், வீட்டு பற்றாக்குறை இன்னும் தீவிரமாக இருப்பதாக மாகாண அரசு தெரிவித்துள்ளது.

சூரிச் மாகாணத்தின் காலி வீட்டு விகிதம் (Leerwohnungsziffer) கடந்த ஆண்டின் 0.48 சதவீதத்திலிருந்து 0.52 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதன்படி, காலியாக உள்ள வீடுகளின் எண்ணிக்கை சுமார் 3,800 இலிருந்து 4,200 ஆக அதிகரித்துள்ளது.

இருப்பினும், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சூரிச் மாகாணத்தின் காலி வீட்டு விகிதம் 1 சதவீதத்திற்கும் கீழே உள்ளது. இந்தக் குறைந்த வீட்டு விநியோகம் வாடகை விலைகள் அதிகரிப்பதற்கும் காரணமாகிறது.

### நகரங்களில் நிலை இன்னும் கடினம்

சூரிச் மாகாணத்தின் Oberland பகுதியில் அதிகபட்சமாக 0.95% காலி வீட்டு விகிதமும், Pfannenstiel பகுதியில் 0.90% விகிதமும் பதிவாகியுள்ளது.

ஆனால் நகரப் பகுதிகளில் நிலை மிகவும் கடினமாக உள்ளது. சூரிச் நகரில் வெறும் 0.11% வீடுகளும், Winterthur நகரில் 0.20% வீடுகளுமே காலியாக உள்ளன. இரு நகரங்களிலும் விகிதம் முந்தைய ஆண்டுகளைவிட சற்று உயர்ந்தாலும், கடந்த 10 ஆண்டுகளின் சராசரியை விட இன்னும் குறைவாகவே உள்ளது.

### வாடகை வீடுகளுக்கே அதிக தேவை

காலியாக உள்ள குடியிருப்புகளில் 75 சதவீதத்திற்கும் அதிகமானவை வாடகை சந்தைக்கானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிய அல்லது பெரிய வீடு என்ற வேறுபாடின்றி அனைத்து அளவிலான குடியிருப்புகளுக்கும் அதிக தேவை காணப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் வேலை வாய்ப்புச் சந்தையின் வளர்ச்சி மந்தமடைந்ததுடன், மக்கள் தொகை வளர்ச்சியும் 1 சதவீதத்திற்குக் கீழே இருந்தபோதிலும், வீட்டு விநியோகம் தேவைக்கு ஈடுகொடுக்க முடியாத நிலை தொடர்கிறது.

### மேலும் புதிய வீடுகள் தேவை

சூரிச் மாகாணத்தின் வீட்டு நெருக்கடியைத் தணிக்க புதிய குடியிருப்புகளை அதிகளவில் கட்டுவதே முக்கிய தீர்வு என மாகாண அரசு தெரிவித்துள்ளது. இந்தத் தேவை இன்னும் நீண்ட காலத்திற்கு தொடரக்கூடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# Bali-யின் புனித "அமைதி நாளை" அவமதித்த Switzerland சுற்றுலாப் பயணிக்கு ஒரு வருட சிறை



இந்தோனேசியாவின் Bali தீவில், இந்துக்களின் புனிதமான Nyepi & Day of Silence (அமைதி நாள்) விதிகளை மீறி, அதனை சமூக ஊடகங்களில் அவமதித்த 26 வயதான Switzerland நாட்டவர் Luzian Andrin Zgraggen என்பவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் Nyepi தினத்தன்று, அனைவரும் வீட்டுக்குள் இருக்க வேண்டும் என்று அவர் தங்கியிருந்த Villa ஊழியர்கள் அறிவுறுத்தியிருந்தனர். அதையும் மீறி அவர் வெளியே சென்று கடற்கரை நோக்கிச் சென்றதுடன், Nyepi பாரம்பரியத்தை கேலி செய்து Instagram-இல் வீடியோக்களையும் பதிவிட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

Nyepi தினத்தில் ஆச்டுடி முழுவதும் இயல்பு வாழ்க்கை பெருமளவில் நிறுத்தப்படும். வீதிகள் வெறிச்சோடும்; விமான நிலையமும் மூடப்படும். இந்த விதிகள் உள்ளூர் மக்களுக்கு மட்டுமல்லாமல் சுற்றுலாப் பயணிகளுக்கும் பொருந்தும்.

Switzerland வெளியுறவுத்துறை இந்த வழக்கு குறித்து அறிந்துள்ளதாகவும், Jakarta-வில் உள்ள Switzerland தூதரகம் சம்பந்தப்பட்ட நபருக்கு தூதரக உதவிகளை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளது.



# ஆட்டம் கண்ட ராஜபக்சாக்களின் அரசியல் எதிர்காலம்

நமது நாட்டில் 2015, 2019, 2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பல செய்திகளையும், படிப்பினைகளையும் நமக்கு பறைசாற்றிச் சென்றிருக்கின்றன. நாம் எதிர்பார்ப்பதெல்லாம் நடப்பதுமில்லை. கணிப்புகள் யாவும் நடந்தேறுவதுமில்லை. வேற்றியும் நிரந்தரமல்ல, தோல்வியும் நிரந்தரமல்ல இப்போது இருக்கின்ற சூழலும் எதிர்காலத்தில் நமக்குரியதல்ல என்பதை தோல்வியுற்ற இராச்சியங்களும், சர்வதிகார ஆட்சிகளும் தோல்வியுற்ற உலகத் தலைவர்களின் வாழ்க்கையும் எமக்குக் கற்றுத் தந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் ~மாற்றம் ஒன்றுதான் நிரந்தரம்| என்பதை உணர்த்தும் செய்தி; .தனைத் தெளிவு படுத்தி நிற்கின்றது.



சின்னத்தம்பி
குருபரன்

ஒரு தலைவரிடத்தில் (அது குடும்பத்தலைவராக இருக்கட்டும், நிறுவனத்தலைவராக இருக்கட்டும், அரசியல் தலைவராக இருக்கட்டும்) சமுக நலன், சமுகத்தின்மீது கொண்ட மரியாதை, சமுகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு, அவர்களை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்வதற்கான எதிர் காலத் திட்டமிடல், அன்பு, கருணை, காருண்யம், பொதுவுடமைச் சிந்தனை என்பன இருக்கும் போதும் அவற்றைச் சொல், செயல், சிந்தனை என்பவற்றினூடாக வெளிப்படுத்தி நடைமுறையில் செயற்படுத்திக்காட்டும்போது அவர் நீடித்து நிலைத்து வாழுந்தலைவராகின்றார். அவ்வாறு இல்லாத தலைவர்கள் மாற்றத்தின் போது தோல்வி என்ற வெள்ளத்தில் அடிபட்டுச் செல்பவர்களாகக் காணப்படுவர்.

ஒரு தலைவரிடத்தில் பதவி, புகழ், அதிகாரம், செல்வாக்கு, ஆசை, அகங்காரம் ஆகியன ஒருமித்திருக்குமாயின் அத்தலைவர் தோல்விக்கு வித்திடுபவராக அமைகின்றார். அந்தவகையில்தான் 50 வருடத்திற்கு மேற்பட்ட அரசியல் அனுபவத்தையும், சட்ட நுணுக்கங்களையும், பாராளுமன்றம், மந்திரிசபை அனுபவங்களையும் கொண்டராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைகின்றார். பிரபல அரசியல்வாதியான ராஜபக்ஷயின் மகனான இவர் ஆரம்ப, இடைநிலைக் கல்வி வாழ்க்கையில் தற்றுணிவு உள்ளவராகவும், தான் எடுத்த கருமத்தைத் துணிந்து நிறைவேற்றுபவராகவும் எத்தகைய சவால்களுக்கும் முகம்கொடுத்து வெற்றி



கொண்டவராகவும் காணப்பட்டிருக்கின்றார். இதனால் இடைநிலைக்கல்வியில் சிறிது காலம் பாடசாலை வாழ்க்கையில் இருந்து ஒதுங்கி இpருக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது. பின்னர் இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்து சட்டக்கல்லூரி சென்று சட்ட வல்லுனராக ஆகும் போதே அரசியலிலும் நுழைந்து கொண்டார்;. ராஜபக்ஷ குடும்பத்தில் நீண்ட கால அனுபவம் பெற்ற அரசியல்வாதியாகத் திகழ்ந்திருக்கின்றார். இத்தகைய பின்னணியும், ஆள்பவமும் "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்ற உணர்வும் அவரை நேரான பாதையில் இருந்து விலத்திச் செல்ல வழிவகுத்தது.

மகிந்தவின் அரசியல் வாழ்க்கையில் 2005 க்கு மன்னர் சிறுபான்மையினர் தொடர்பான பாராளுமன்றக் கலந்துரையாடல்களிலும், மந்திரி சபைக் கலந்துரையாடல்களிலும், பொது நிகழ்வுகளிலும் ஒதுங்கியிருந்தவராகவே காணப்பட்டிருக்கின்றார். சிறுபான்மையினரின் தேசியம், தனித்துவம் என்பவற்றிலும் அவர்களின் உரிமை, அபிலாசைகள், என்பவற்றில் பொதுவாக அக்கறை அற்றவராகவே காணப்பட்டிருக்கின்றார். பேச்சளவில் இதனை வலியுறுத்தினாலும் அடிப்படையில் உணர்வுரீதியாக அதனைப் புரிந்து எச்சந்தர்ப்பத்திலும் செயற்பட்டவரல்லர். இந்த உள்ளார்ந்த சிந்தனையே ஏழாவது ஜனாதிபதித் தேர்தலின் போது தனது வெற்றிக்குச் சிறுபான்மையினர் வாக்குகள் தேவையில்லை பெரும்பான்மையினரின் வாக்குகள் மாத்திரம் என் வெற்றியை உறுதி செய்யும் என்ற கருத்தியலுக்கு அவரை இட்டுச் சென்றது. 2005 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஐந்தாவது ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் இருந்து செயற்பட்ட விதத்தையும் அவர் கூறிய கருத்துக்களையும், அவர் பின்பற்றிய கொள்கைகளையும் நன்று கூர்ந்து ஆய்வு செய்பவர்களுக்கு இந்த உண்மை புலப்படும். இதற்குக் காரணம் தம் அரசியல் வாழ்க்கையில் சிறுபான்மையினர் விவகாரங்களில் விலத்தியிருக்கும் போக்கினை கடைப்பிடித்தமை ஆகும்.

நான் ஏற்கனவே கூறியது போல் பதவி, புகழ், அதிகாரம், செல்வாக்கு, அகங்காரம், ஆசை, ஆள்பலம் என்பவற்றோடு சகோதரங்களின் பக்க பலமும் அவரை தன்நிலை உணர்ந்து செயற்படாத ஒருவராகவும் மாற்றம் ஒன்றுதான் நிரந்தரம் அந்த மாற்றத்தின் போது தோல்வியும் நிகழலாம் என்று சிந்தித்துச் செயலாற்றுகின்ற பக்குவத்தையும் அவரிடமிருந்து அகற்றி விட்டிருந்தது.

இருபத்தாறு வருட கால கொடிய யுத்தத்தின் இறுதி விளைவுகள் இவருடைய ஆட்சிக்காலத்திலே அறுவடை செய்யப்பட்டன. யுத்தத்தை முடித்து வைப்பதற்கு அவர் சேர்ந்த கூட்டணியும், எடுத்த தீர்மானங்களும், பணிப்புரைகளும், கட்டளைகளும், கூறிய கருத்துக்களும் சிறுபான்மையினரை எவ்வாறெல்லாம் பாதித்தது அவர்களின் உயிர் உடமைகளை காவுகொண்டது. முற்றுப் பெறாத அகதி வாழ்க்கை ஆடு, மாடுகளை அடைத்து வைப்பதைப் போலான இடைத்தங்கல் முகாங்கள், இறுதி யுத்தத்தில் பயன்படுத்திய பயங்கர ஆயுதங்கள் அதனால் ஏற்பட்ட



அழிவுகள், சரணடைந்தவர்களை சித்திரவதை செய்து கொலை செய்தமை ஒப்படைப்பின் போதும் முகாம்களில் இருந்தும் அகதிகளாக வெளியேறி வரும்போது கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்களின் தொடர் கதைகளும், ஆடு, மாடுகளை வாகனங்களில் ஏற்றி வந்து திட்டமிடப்படாது இறக்கிவிடுவது போலான மீள்குடியமர்த்தல்களும், அவர்களைத் தொடர்ந்தேர்ச்சியான கண்காணிப்பினூடான துன்புறுத்தல்களும், மீள்கைதுகளும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு ஏற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படாமையும், யுத்த வடுக்களிலிருந்து விடுபடுவதற்கான ஆற்றுப்படுத்தல் ஏற்பாடுகள் செய்யப்படாமையும், இராணுவ மயமாக்கமும், நிர்வாகத்தில் இராணுவத்தலையீடும், எங்கும் எதிலும் இராணுவம் நுழையலாம், தகவல் திரட்டலாம் என்ற பிற்போக்கான சிந்தனையும், உயர் பாதுகாப்பு வலயங்களும், விரிபுபடுத்த காணி அபகரிப்பும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கான காணிப்பத்திரங்களும், கலாசாரச் சீரழிவுகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஒரு மேடைப் பேச்சில் பதவி, புகழ், அதிகாரம், அகங்காரம், சகோதரபலம், சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் தாலாட்டு ஆகியவற்றினால் இறுமாப்புக் கொண்டு 'இலங்கையில் சிறுபான்மையினர் என்றொரு இனமே இல்லை' எனக் கூறுமளவுக்கு இட்டுச் சென்றது. 1956, 1978, 1983 கலவரங்கள், பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம், வட்டமேசை மகாநாடுகள், பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், திம்புப் பேச்சுவார்த்தை, இலங்கை இந்திய ஒப்பந்தம், ஒஸ்லோ பேச்சு வார்த்தை, 13 வது திருத்தச்சட்டம், ஆகிய யாவும் தமிழ் சிறுபான்மையினரோடு சம்பந்தப்பட்டன என்பதனை மறந்து 'முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது' போலான கருத்தாகவே அமைந்திருந்தன. அ து அவரின் பிற்போக்குச் சிந்தனையையும் அவருடைய வாழ்கையில் இத்தகைய கொள்ளையைத்தான் கடைப்பிடித்து வந்திருந்தார் என்பதையும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தின. இத்தகைய ஒருவரிடம் சிறுபான்மையினர் நலன் தேசியம், தனித்துவம், சுயநிர்ணய உரிமைகள் என்பவற்றை எதிர்பார்ப்பது குதிரைக்கொம்பாக அமையும்.

2005 இல் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதில் இருந்து மறைத்து வைத்திருந்த சிறுபான்மையினருக்கு எதிரான மறுமுகத்தைச் சாதுரியமாகப் படிப்படியாக வெளிக்காட்டிச் சிறந்த நடிகனாகவும் தன்னை இனங்காட்டிக் கொண்டார் என்பதே உண்மை. அவரைப் பற்றிப் பூரணமாக ஆய்வு செய்யும் ஒருவருக்கு இந்த உண்மை புலப்படும்;. இத்தகையவர் 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னரான உள்ளூராட்சி, மாகாணசபை பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் யாவற்றிலும் யுத்தவெற்றி, புலிப்பூச்சாண்டி ஆகியவற்றைக் காரணங்காட்டி வாக்கு வங்கியை நிரப்பி வெற்றிவாகை சூடி வந்தார். இதற்குச் சிங்களப் பேரினவாதிகளும் பௌத்த மகா சங்கத்தினரும் ஒத்து ஊதி அவருக்குப் பக்கபலமாக அமைந்தனர். இதில் வங்குரோத்து, வியாபார அரசியல் நடாத்திய சில முஸ்லிம், மலையக அரசியல்வாதிகள், சில வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடத்தக்கவர்கள். போதாக்குறைக்குக் குறிப்பிட்ட சில காலம் மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாத அரசியல் பேசுபவர்களையும் இணைத்துக் கொண்டு தமது கருத்தைப் பலப்படுத்தி வந்தார். சுதந்திர தினம், யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள், தேசத்திற்கு மகுடம் கண்காட்சி, பொது வைபவங்கள் என்பனவற்றில் யுத்தவெற்றியும், இனவாதமும் பாடுபொருளாக மாறின.

2007 ம் ஆண்டு இவரின் சந்தர்ப்பவாத அரசியலை விளங்கிக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணி, பொது சன முன்னணியோடு இருந்த கூட்டை முறித்துக் கொண்டதில் இருந்து மக்கள் விடுதலை முன்னணிக்குள் பிளவை ஏற்படுத்திக் கட்சியை ஆட்டங்கான வைத்தார்.

*அடுத்த வாரம் தொடரும்...*

# Switzerland ஐ விட இத்தாலியை நாடும் கோடீஸ்வரர்கள்!

## செல்வந்தர்களின் குடியேற்றத்தில் 40% வீழ்ச்சி - புதிய போட்டியாளராக இத்தாலி



உலகின் செல்வந்தர்கள் குடியேற விரும்பும் முக்கிய நாடுகளில் ஒன்றாக நீண்ட காலமாகத் திகழ்ந்து வந்த Switzerland, தற்போது கடும் போட்டியை எதிர்கொள்கிறது. குறிப்பாக அண்டை நாடான இத்தாலி, கோடீஸ்வரர்களை ஈர்ப்பதில் Switzerland-க்கு புதிய சவாலாக உருவெடுத்துள்ளது.

3,000-இல் இருந்து 1,800 ஆகக் குறைவு

New World Wealth (NWW) நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி, கடந்த ஆண்டு சுமார் 3,000 கோடீஸ்வரர்கள் Switzerland-க்கு குடிபெயர்ந்த நிலையில், 2026ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை சுமார் 1,800 ஆகக் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒரே ஆண்டில் சுமார்
40 சதவீத வீழ்ச்சியாகும்.

குறைந்த வரிகள், அரசியல் நிலைத்தன்மை, தனியுரிமை மற்றும் பாதுகாப்பு ஆகியவை Switzerland-ஐ பல ஆண்டுகளாக உலக செல்வந்தர்களின் விருப்பமான குடியேற்ற நாடாக வைத்திருந்தன.

ஆனால் தற்போது அந்த நிலை மாறத் தொடங்கியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஏன் இத்தாலி பிரபலமாகிறது?

New World Wealth ஆய்வுப் பிரிவுத் தலைவர் Andrew Amoils கூறுகையில், வரி அடிப்படையில் Switzerland முன்பைப் போன்று கவர்ச்சிகரமான நாடாக இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

Monaco, Montenegro, Panama மற்றும் இச்தூட்ச்ண Islands போன்ற குறைந்த வரி வசதிகளைக் கொண்ட இடங்களையும் செல்வந்தர்கள் பரிசீலித்து வருகின்றனர்.

ஆனால் Switzerland-க்கு மிக அருகிலேயே பெரிய போட்டியாளராக உருவாகியிருப்பது இத்தாலி.

குறிப்பாக பிரிட்டன் மற்றும் பிரான்ஸைச் சேர்ந்த பல செல்வந்தர்கள் தற்போது Switzerland-ஐ விட இத்தாலியைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தாலியின் Pauschalsteuer
முக்கிய காரணமா?

வெளிநாட்டிலிருந்து இத்தாலிக்கு குடியேறும்



செல்வந்தர்களின் வெளிநாட்டு வருமானத்திற்கு சிறப்பு Pauschalsteuer – ஒரே தொகை வரி முறை வழங்கப்படுவது முக்கிய ஈர்ப்பாக உள்ளது.

Switzerland-ன் சில கன்டோன்களிலும் இதுபோன்ற மொத்த வரி ஒப்பந்தங்கள் இருந்தாலும், இத்தாலியின் வரி ஏற்பாடுகள் சில செல்வந்த குடும்பங்களுக்கு எளிமையானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் இருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

PwC நிபுணர் Rachel Cornwell கருத்துப்படி, குறிப்பாக நிறுவனங்களை வைத்திருக்கும் தொழில்முனைவோருக்கு Switzerland-ன் சொத்து வரி (Verm5genssteuer) குறிப்பிடத்தக்க சுமையாக மாறக்கூடும்.

இதனால் Switzerland-ல் வசிக்கும் சில தொழில்முனைவோர் கூட இத்தாலிக்கு இடம்பெயர்வது குறித்து ஆலோசனை கோருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

Zug, Schwyz இன்னும் செல்வந்தர்களின் விருப்பம்

இருப்பினும் Switzerland முழுவதும் நிலைமை ஒரே மாதிரியாக இல்லை.

Zug, Schwyz, Luzern, Nidwalden மற்றும் Obwalden போன்ற குறைந்த வரி கொண்ட கன்டோன்கள் இன்னும் செல்வந்தர்களிடையே பிரபலமாக உள்ளன.

Zug கன்டோனின் நிதித்துறை இயக்குநர் Heinz Tnnler கூறுகையில், வளைகுடா நாடுகளைச் சேர்ந்த செல்வந்தர்கள் உட்பட வசதிபடைத்தவர்கள் தொடர்ந்து Zug-க்கு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் இத்தாலியும் குறிப்பாக Milan பிராந்தியமும் Switzerland-க்கு தீவிர போட்டியாக மாறியுள்ளதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பாதுகாப்பிலும் புதிய கவலை

Switzerland-ன் மிகப்பெரிய பலங்களில் ஒன்று பாதுகாப்பு. ஆனால் சமீபத்தில் Geneva ஏரி பிராந்தியத்தில் செல்வந்தர்களின் வீடுகளை இலக்காகக் கொண்ட கொள்ளைச் சம்பவங்கள் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

குற்றவாளிகள் வில்லாக்களுக்குள் புகுந்து, குடியிருப்பவர்களை மிரட்டி விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள் மற்றும் நகைகளை கொள்ளையடிக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நான்கு முறை Formula 1 உலக சாம்பியனான Alain Prost-இன் Nyon அருகிலுள்ள வீடும் முகமூடி அணிந்த கொள்ளையர்களால் இலக்காக்கப்பட்டதாக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏழு சம்பவங்கள் தொடர்பாக தெற்கு பிரான்ஸைச் சேர்ந்த பல குற்றக் குழுக்களை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Switzerland தனது கவர்ச்சியை இழக்கிறதா?

Switzerland இன்னும் உலகின் செல்வந்தர்களை ஈர்க்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாகவே உள்ளது. ஆனால் வரி போட்டி, சொத்து வரி மற்றும் பாதுகாப்பு குறித்த கவலைகள் அதன் முன்னிலைக்கு புதிய சவால்களை உருவாக்குகின்றன.

அதேவேளை, சிறப்பு வரிச் சலுகைகளுடன் செல்வந்தர்களை ஈர்க்கும் இத்தாலி – குறிப்பாக Milan & Switzerland-க்கு அருகிலேயே வலுவான போட்டியாளராக உருவெடுத்து வருகிறது.

கோடீஸ்வரர்களின் புதிய தேர்வு Switzerland&B, இத்தாலியா? வரவிருக்கும் ஆண்டுகளில் இந்தப் போட்டி மேலும் தீவிரமடையக்கூடும்.




# இணையம் செயலிழந்தாலும் அத்தியாவசியப் பொருட்களுக்கு அட்டையால் பணம் செலுத்தலாம்

தரவுத் தொடர்பு அல்லது இணையச் சேவை செயலிழந்தாலும் உணவு, மருந்து மற்றும் எரிபொருளுக்கு அட்டையால் பணம் செலுத்தக்கூடிய அவசரகாலத் திட்டம் Switzerland-ல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

உள்நாட்டில் வழங்கப்பட்ட Debit அல்லது Credit அட்டையும் PIN எண்ணும் இதற்குத் தேவை. கடைகளிலுள்ள அட்டை வாசிப்புக் கருவிகளுக்கு மின்சாரமும் இருக்க வேண்டும். வங்கிகள், கட்டணச் சேவை நிறுவனங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் இந்த வசதியைப் படிப்படியாக அறிமுகப்படுத்தவுள்ளனர்; 2027 இறுதிக்குள் பரவலாகக் கிடைக்கச் செய்வதே இலக்கு.

இந்த வசதி எல்லாக் கடைகளிலும் கட்டாயமல்ல. அவசரகாலத்திற்காக வீட்டில் சிறிதளவு பணத்தையும் வைத்திருக்குமாறு அதிகாரிகள் தொடர்ந்து பரிந்துரைக்கின்றனர்.

## Zuerich-ல் வீடு தேடுவோருக்கு நெருக்கடி தொடர்கிறது

Zuerich நகரத்தில் 2026 ஜூன் 1 அன்று வெறும் 252 வீடுகளே காலியாக இருந்தன. நகரின் மொத்த வீடுகளில் இது 0.11% மட்டுமே. கடந்த ஆண்டைவிட 17 வீடுகள் அதிகரித்திருந்தாலும், வீட்டுச் சந்தையின் நெருக்கடி தீரவில்லை.

Zuerich கான்டன் முழுவதும் காலி வீடுகளின் எண்ணிக்கை சுமார் 3,800இலிருந்து 4,200ஆக அதிகரித்துள்ளது. எனினும் காலி வீட்டு விகிதம் 0.52% மட்டுமே இருப்பதால், மலிவான வீடுகளுக்கான போட்டி தொடர்ந்து கடுமையாக உள்ளது.

வீடு தேடுவோர் போலி விளம்பரங்களைத் தவிர்க்க வேண்டும். வீட்டைப் பார்வையிடுவதற்கோ திறவுகோல் பெறுவதற்கோ முன்கூட்டியே பணம் அனுப்புமாறு கோரப்பட்டால் மிகுந்த எச்சரிக்கை அவசியம்.

## Swiss காப்புறுதி நிறுவனங்களின் இலாபம் இரு மடங்கிற்கு மேல் உயர்வு



Switzerland காப்புறுதி நிறுவனங்கள் 2025ஆம் ஆண்டில் மொத்தம் CHF 24.4 பில்லியன் இலாபம் ஈட்டியுள்ளதாக FINMA தெரிவித்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட CHF 14 பில்லியன் அல்லது 136% அதிகமாகும்.

காப்புறுதி நிறுவனங்களின் நிதிநிலை வலுப்பெற்றிருந்தாலும், இதனால் வாகன, வீடு அல்லது பிற காப்புறுதிக் கட்டணங்கள் உடனடியாகக் குறையும் என்று பொருளல்ல. ஒவ்வொரு நிறுவனமும் அபாயம், இழப்பீட்டுச் செலவு மற்றும் ஒப்பந்த விவரங்களின் அடிப்படையில் கட்டணத்தைத் தீர்மானிக்கிறது.

ஆகவே புதுப்பிப்பு அறிவிப்பு கிடைக்கும்போது பழைய கட்டணத்தைத் தானாக ஏற்காமல், பல நிறுவனங்களின் சலுகைகளை ஒப்பிடுவது குடும்பங்களுக்கு செலவைக் குறைக்க உதவும்.

## வறட்சியால் பால் உற்பத்தி பாதிப்பு;
# விலை உயருமா?



வெப்பம் மற்றும் வறட்சியால் பசுக்கள் குறைவாக உண்பதாகவும், அதன் காரணமாகப் பால் உற்பத்தி குறைந்து வருவதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இயற்கையான தீவனப் பற்றாக்குறையால் வெளியிலிருந்து கூடுதல் தீவனம் வாங்க வேண்டியிருப்பது பண்ணைகளின் செலவையும் உயர்த்தியுள்ளது.

இதனால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் பால் விலையை உயர்த்துமாறு Swiss Milk Producers Federation மற்றும் விவசாய அமைப்புகள் கோரியுள்ளன. வழிகாட்டி விலை விரைவில் மறுபரிசீலனை செய்யப்படவுள்ளது.

விலை உயர்த்தப்பட்டால் இலையுதிர்காலத்தில் பால், சீஸ் உள்ளிட்ட பொருட்களின் சில்லறை விலையிலும் தாக்கம் ஏற்படலாம். ஆனால் நுகர்வோர் விலை உயர்வு தொடர்பாக இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.




## உயிரியல் பண்ணைகளுக்கு
# தீவன விதிகளில் தற்காலிகத் தளர்வு

வறட்சியால் தீவன விளைச்சல் குறைந்துள்ளதால், உயிரியல் பண்ணைகள் தங்கள் கால்நடைகளுக்குத் தேவையான மொத்த தீவனத்தில் அதிகபட்சம் 20% வரை உயிரியல் சான்றில்லாத புல், வைக்கோல் அல்லது சைலேஜ் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

அதே வரம்புக்குள் உயிரியல் சான்றில்லாத நிலங்களில் கால்நடைகளை மேய்க்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த விதிவிலக்கு 2026 இறுதிவரை அமலில் இருக்கும்.

இந்த நடவடிக்கை கால்நடைகளைப் பாதுகாக்கவும், பால் மற்றும் இறைச்சி உற்பத்தியில் ஏற்படக்கூடிய கடுமையான வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## AI மாற்றும் நிதித்துறை:
# உங்கள் வேலை எவ்வளவு பாதுகாப்பானது?

செயற்கை நுண்ணறிவு நிதித்துறையில் வேலை வாய்ப்புகளை அழிக்குமா அல்லது புதிய தொழில் முன்னேற்றங்களுக்கு வழி வகுக்குமா என்பதை அறிய Switzerland முழுவதும் புதிய ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

finews, Swiss Finance Institute மற்றும் Communicators நிறுவனம் இணைந்து, Switzerland நிதித்துறையின் தொழில் வாய்ப்புகள் தொடர்பான வருடாந்த ஆய்வை 15ஆவது முறையாக நடத்துகின்றன. வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், சொத்து மேலாண்மை நிறுவனங்கள் உள்ளிட்ட நிதிச் சேவைத் துறைகளில் பணிபுரிபவர்களும், இத்துறைக்குள் நுழையத் தயாராகும் மாணவர்கள் மற்றும் பயிற்சியாளர்களும் இதில் பங்கேற்கலாம்.

ஆய்வின் முக்கிய கேள்விகள் நிதித்துறையின் அன்றாடப் பணிகளை அஐ ஏற்கெனவே எந்த அளவுக்கு மாற்றியுள்ளது, புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த ஊழியர்களுக்கு நிறுவனங்கள் போதுமான பயிற்சி வழங்குகின்றனவா, எதிர்காலத்தில் எந்தப் பணிகள் மாற்றமடையும் என்பன ஆய்வின் முக்கிய அம்சங்களாகும். அத்துடன் சர்வதேச நிதி மையங்களுடன் ஒப்பிடுகையில் Switzerland தொடர்ந்து கவர்ச்சிகரமான நிதி மையமாக இருக்குமா, துறை எதிர்கொள்ளும் பிரதான அபாயங்கள் மற்றும் புதிய வாய்ப்புகள் என்ன என்பதும் ஆராயப்படுகிறது.

UBS நிறுவனம் தனது சில நடவடிக்கைகளை வெளிநாட்டுக்கு மாற்றக்கூடிய அபாயம் மற்றும் அவ்வாறான தீர்மானம் Switzerland நிதித்துறைக்கு ஏற்படுத்தக்கூடிய விளைவுகளும் ஆய்வில் இடம்பெற்றுள்ளன.

# சுயாதீன சொத்து மேலாளர்களுக்கு எச்சரிக்கை: அதிகரிக்கும் Shadow AI அபாயம்




நிறுவனத்தின் அனுமதியின்றி ஊழியர்கள் பொதுவாகக் கிடைக்கும் செயற்கை நுண்ணறிவுக் கருவிகளைப் பயன்படுத்துவது, வாடிக்கையாளர்களின் இரகசியத் தகவல்களுக்கு பெரும் அபாயத்தை ஏற்படுத்துவதாக Switzerland நிதித்துறைக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை Shadow AI என அழைக்கப்படுகிறது. சிறிய சொத்து மேலாண்மை நிறுவனங்களில் பணிச்சுமையைக் குறைப்பதற்காக ஊழியர்கள் ChatGPT போன்ற AI கருவிகளைத் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும் போது இந்த அபாயம் உருவாகிறது.

**வாடிக்கையாளர் தகவல்கள் வெளிநாட்டுக்குச் செல்லலாம்**

சொத்து மேலாளர்கள் வாடிக்கையாளர்களின் முதலீட்டுத் தொகை, குடும்ப நிலை, வங்கிக் கணக்கு மற்றும் தனிப்பட்ட விவரங்கள் போன்ற மிகவும் உணர்வுபூர்வமான தகவல்களைக் கையாளுகின்றனர்.

அத்தகைய தகவல்களை நிறுவனத்தால் அனுமதிக்கப்படாத இணையவழி AI கருவிகளில் பதிவிடுவது, சட்டபீதியாக மூன்றாம் தரப்பினருக்கு-பெரும்பாலும் வெளிநாட்டிலுள்ள நிறுவனத்துக்கு-தகவல்களை வழங்குவதாகக் கருதப்படலாம்.

இதனால் Switzerland தரவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் தொழில்சார் இரகசிய விதிகள் மீறப்படக்கூடிய அபாயம் உள்ளது. நல்ல நோக்கத்துடனோ பணியை விரைவாக முடிப்பதற்காகவோ தகவல்கள் பதிவிடப்பட்டிருந்தாலும், அது சட்டப் பொறுப்பிலிருந்து பாதுகாப்பளிக்காது. 27% ஊழியர்கள் வாடிக்கையாளர்





தகவல்களை AI-யில் பதிவிடுகின்றனர்

German மொழி பேசும் Switzerland பகுதிகளில் சுமார் 1,300 அலுவலக ஊழியர்களிடம் HP Switzerland நடத்திய ஆய்வின்படி, பாதிக்கும் அதிகமானோர் வாரத்திற்கு ஒருமுறையாவது AI கருவிகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் 48% பேருக்கு மட்டுமே தங்களது நிறுவனத்தில் தெளிவான அஜ பயன்பாட்டு விதிமுறைகள் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். மேலும் 27% பேர் வாடிக்கையாளர்கள் தொடர்பான அல்லது தனிப்பட்ட தகவல்களை அஜ கருவிகளில் பதிவிடுவதாகக் கூறியுள்ளனர்.

இதனால் குடச்ஞீணிதீ அஜ என்பது ஒரு சில ஊழியர்களின் தவறு மட்டுமல்ல; நிறுவனங்கள் முறையாகக் கையாள வேண்டிய பரவலான பாதுகாப்பு அபாயமாக மாறியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### FINMA எதிர்பார்ப்பது என்ன?

AI கருவிகள் எங்கு, எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டும் என Switzerland நிதிச் சந்தை மேற்பார்வை அமைப்பான FINMA எதிர்பார்க்கிறது.

தெளிவான பொறுப்புகள், தரமான தகவல்கள், தொடர்ச்சியான கண்காணிப்பு, பரிசோதனை மற்றும் AI வழங்கும் முடிவுகளை விளக்கக்கூடிய நடைமுறைகள் அவசியம். AI தவறான முடிவை வழங்கினாலும், இறுதிப் பொறுப்பு ஊழியர் மற்றும் நிறுவனத்திடமே இருக்கும்.

### முழுமையான தடையல்ல; பாதுகாப்பான பயன்பாடே தீர்வு

அஜ பயன்பாட்டை முழுமையாகத் தடை செய்வது நடைமுறைத் தீர்வாக இருக்காது என Marcuard Heritage நிறுவனத்தின் இணக்கப்பாடு மற்றும் செயல்பாட்டுப் பிரிவுத் தலைவர் Peter Alder குறிப்பிட்டுள்ளார்.

### அதற்குப் பதிலாக நிறுவனங்கள்:

அனுமதிக்கப்பட்ட AI கருவிகளின் பட்டியலை உருவாக்க வேண்டும். வாடிக்கையாளர் தகவல்களை அனுமதியற்ற கருவிகளில் பதிவிடத் தடை விதிக்க வேண்டும். தகவல்களை AI-க்கு வழங்குவதற்கு முன் அடையாளம் தெரியாதவாறு மாற்ற வேண்டும். ஊழியர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சி வழங்க வேண்டும்.

வாடிக்கையாளர் தரவுகளைப் பயிற்சிக்குப் பயன்படுத்தாத பாதுகாப்பான நிறுவன AI சேவைகளை வழங்க வேண்டும்.

AI மூலம் கிடைக்கும் செயல்திறனையும் வாடிக்கையாளர்களின் இரகசியத்தன்மையையும் ஒரே நேரத்தில் பாதுகாக்க முடியும். ஆனால் அதற்கு தெளிவான விதிமுறைகள், பாதுகாப்பான தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் அவசியம் எனக் கட்டுரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# 13 வது AHV டிசம்பரில் வருகிறது - VAT 8.5% ஆக உயருமா? மக்கள் வாக்கெடுப்பில் இறுதி முடிவு

Switzerland-இல் 13வது AHV ஓய்வூதியம் 2026 டிசம்பர் முதல் வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதியை VAT வரியை உயர்த்தி திரட்ட மத்திய பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. எனினும், VAT உயர்வு குறித்து இறுதி முடிவை மக்கள் வாக்கெடுப்பில் எடுக்க வேண்டும்.

**2026 முதல் 13வது AHV**

13வது AHV ஓய்வூதியத்தை வழங்குவதற்கு 2026ஆம் ஆண்டில் சுமார் 4.2 பில்லியன் பிராங்க் தேவைப்படும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்தச் செலவு 2030இல் சுமார் 4.5 பில்லியன் பிராங்காகவும், 2040இல் 5.4 பில்லியன் பிராங்காகவும் அதிகரிக்கலாம்.

**VAT 8.1% இலிருந்து 8.5%?**

இதற்கான நிதியைத் திரட்ட பொதுவான VAT விகிதத்தை 0.4 சதவீதப் புள்ளியால் உயர்த்துவதற்கு பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன்படி தற்போது 8.1 சதவீதமாக உள்ள பொதுவான VAT, 8.5 சதவீதமாக உயர்த்தப்படலாம். இதன்மூலம் ஆண்டுக்கு சுமார் 1.5 பில்லியன் பிராங்க் கூடுதல் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சம்பளப் பங்களிப்பை 0.2 சதவீதப் புள்ளியால் அதிகரிக்கும் முன்மொழிவு நிராகரிக்கப்பட்டது.

**மக்கள் முடிவு**

13 வது AHV வழங்கப்படுவது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்கள் வாக்கெடுப்பில் தீர்மானிக்க வேண்டியது ஙஅகூ மூலம் அதற்கான நிதியை எவ்வாறு திரட்டுவது என்பதாகும்.

# Switzerland இல் FM வானொலி தொடர்கிறது புதிய அனுமதிகள் இலையுதிர்காலத்தில்



Switzerland-இல் UKW/FM வானொலி ஒலிபரப்புக்கான புதிய அனுமதிகளை 2026 இலையுதிர்காலத்தில் வழங்க உள்ளதாக மத்திய தகவல் தொடர்பு அலுவலகம் BAKOM அறிவித்துள்ளது.

BAKOM, Switzerland-இன் 13 பிராந்தியங்களில் 20 FM frequency தொகுப்புகளுக்கு விண்ணப்பங்களை கோரியிருந்தது. மொத்தம் 19 செல்லுபடியாகும் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

ஒரே frequency-க்கு ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி விண்ணப்பங்கள் வராததால் ஏலம் நடத்தப்படாது. விண்ணப்பித்த வானொலி நிறுவனங்களுக்கு நேரடியாக அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

முன்னதாக 2026 இறுதியில் FM/UKW ஒலிபரப்பை முற்றாக நிறுத்தி DAB+ முறைக்கு மாற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் பாராளுமன்றத்தின் தலையீட்டைத் தொடர்ந்து FM சேவையை மேலும் காலம் தொடர வழி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து SRG யும் மீண்டும் FM/UKW ஒலிபரப்புக்கு திரும்புவதாக அறிவித்துள்ளது.




# போலி பொலிஸ் அழைப்புகள் 75% சரிவு - AI மோசடிகள் புதிய அச்சுறுத்தல்

வெளிநாடுகளிலிருந்து Switzerland பொலிஸ், வங்கி அல்லது அரச அதிகாரிகள் போல மேற்கொள்ளப்பட்ட மோசடி அழைப்புகள் ஜூலையில் 75 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைந்துள்ளதாக கூட்டாட்சி இணையப் பாதுகாப்பு அலுவலகமான BACS தெரிவித்துள்ளது.

2026 ஜனவரி முதல் ஜூன் வரை மாதந்தோறும் 400க்கும் அதிகமான புகார்கள் பதிவாகின. வெளிநாட்டு அழைப்புகளில் போலியான Switzerland கைத் தொலைபேசி இலக்கங்களை Unknown அல்லது Anonymous எனக் குறிக்கும் விதி ஜூலை 1 முதல் அமலுக்கு வந்ததைத் தொடர்ந்து, ஜூலை மாதப் புகார்கள் 100க்கும் கீழாகக் குறைந்தன.

எனினும் இணைய அபாயம் இன்னும் உயர் நிலையில் உள்ளது. 2026 முதல் ஆறு மாதங்களில் பொதுமக்களிடமிருந்து 27,128 இணையச் சம்பவப் புகார்களும், முக்கிய உட்கட்டமைப்பு நிறுவனங்களிடமிருந்து கட்டாயமாக அறிவிக்கப்பட்ட 200 இணையத் தாக்குதல்களும் BACS-க்கு கிடைத்துள்ளன.

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி தனிப்பட்ட மற்றும் நம்பகமான செய்திகள் உருவாக்கப்படுவது அதிகரித்துள்ளது. வேலை தேடுபவர்களுக்கு போலியான Dream Job வாய்ப்புகள் மற்றும் முதலீட்டுத் திட்டங்களை அனுப்பி, Cryptocurrency உட்பட பெருந்தொகைப் பணத்தைத் திருடும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

VoicePhishing, TWINT மோசடி, Microsoft 365 கணக்குத் திருட்டு மற்றும் தீங்கிழைக்கும் மின்னஞ்சல் இணைப்புகளும் முக்கிய அச்சுறுத்தல்களாக உள்ளன. தொலைபேசி மோசடிகள் குறைந்திருந்தாலும் மக்கள் எச்சரிக்கையைக் குறைக்க வேண்டாம் என BACS அறிவுறுத்துகிறது.

பாதுகாப்புக்கு: அறிமுகமற்ற அழைப்புகளில் PIN, கடவுச்சொல் அல்லது வங்கித் தகவல்களை வழங்காதீர்கள். சந்தேகம் ஏற்பட்டால் அழைப்பைத் துண்டித்து, பொலிஸ் அல்லது வங்கியின் அதிகாரப்பூர்வ இலக்கத்திற்கு நீங்களே அழையுங்கள்.




## மாணவியின் உயிரைப் பாதுகாக்க

# 250 மாணவர்களுக்கு Nuts தடை!

Bern Oberland பகுதியில் EÒÍ Wimmis நகராட்சியின் Chrmig பாடசாலையில், கடுமையான கொட்டை மற்றும் நிலக்கடலை ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட மாணவி ஒருவரைப் பாதுகாக்க முழுமையான தடை அமல்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்புவரை கல்வி கற்கும் சுமார் 250 மாணவர்கள், பாடசாலை நேரத்தில் கொட்டை வகைகள் அல்லது அவை கலந்த உணவுகளை வளாகத்திற்குக் கொண்டுவரவோ உண்ணவோ முடியாது. அக்ரூட், பாதாம், ஹேசல்நட், நிலக்கடலை மற்றும் அவை கலந்த தின்பண்டங்களும் தடையில் அடங்குகின்றன.

பாடசாலை நேரத்திற்கு வெளியே நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு இந்தத் தடை பொருந்தாது. மாணவர்களின் உணவுப் பெட்டிகள் சோதனையிடப்படாது என்றும், கட்டாயம் தேவைப்படும் காலத்திற்கு மட்டுமே கட்டுப்பாடு நீடிக்கும் என்றும் நகராட்சி தெரிவித்துள்ளது.

கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டால் அரிப்பு மற்றும் தோல் தடிப்பு மட்டுமின்றி, மூச்சுத்திணறல், இரத்தச் சுற்றோட்டப் பாதிப்பு மற்றும் உயிருக்கு ஆபத்தான Anaphylaxis ஏற்படலாம். பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர் பரிந்துரைத்த அவசர மருந்துகளையும் Adrenaline AutoInjector சாதனத்தையும் எப்போதும் வைத்திருக்க வேண்டும் என Switzerland ஒவ்வாமை மையம் அறிவுறுத்துகிறது.

சமூக ஊடகங்களில் சிலர் தடையை விமர்சித்துள்ளபோதிலும், இது ஒரு மாணவியின் உயிரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எனப் பல பெற்றோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# AI பயன்பாட்டுக்கு வழிவகுக்கும் புதிய Zuerich பொலிஸ் சட்டம் - உச்ச நீதிமன்றத்தில் முறையீடு

Zürich மாநிலத்தில் பொலிஸாரின் கண்காணிப்பு மற்றும் தரவு ஆய்வு அதிகாரங்களை விரிவுபடுத்தும் புதிய சட்டத்திற்கு எதிராக சட்டத்தரணிகள், சிவில் அமைப்புகள் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் Switzerland கூட்டாட்சி உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளன.

Zürich மாநில நாடாளுமன்றம் அண்மையில் பொலிஸ் சட்டத்தில் முக்கிய திருத்தங்களை நிறைவேற்றியுள்ளது.

இதன்படி, குறிப்பிட்ட குற்றச்சாட்டு அல்லது சந்தேகம் இல்லாத நிலையிலும் இணையத்தில் தகவல் சேகரித்தல், மூடப்பட்ட Online Forum-களில் விசாரணை மேற்கொள்ளுதல் மற்றும் தனிநபர் தரவுகளை செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான அமைப்புகள் மூலம் பகுப்பாய்வு செய்தல் போன்ற அதிகாரங்கள் பொலிஸாருக்கு வழங்கப்படுகின்றன.

### “பாரிய கண்காணிப்புக்கு வழிவகுக்கும்”

இந்த மாற்றங்களுக்கு எதிராக Demokratische Jurist Zürich (DJZ) உள்ளிட்ட பல அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் கூட்டாட்சி உச்ச நீதிமன்றத்தில் புகார் செய்துள்ளனர்.

குற்றச்சந்தேகம் இல்லாமலேயே பொது மக்களைப் பற்றிய பெருமளவு தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்து, அவற்றை தானியங்கி முறையில் பகுப்பாய்வு செய்ய புதிய சட்டம் வழிவகுக்கக்கூடும் என்பது அவர்களின் முக்கிய குற்றச்சாட்டு.

### AI ஒரு “Black Box” ஆகுமா?

AI அடிப்படையிலான அல்கோரிதங்கள் எவ்வாறு முடிவுகளை எடுக்கின்றன என்பது எப்போதும் வெளிப்படையாக இருக்காது என்றும், தவறான அல்லது பாகுபாடான அனுமானங்கள் முடிவுகளில் தாக்கம் செலுத்தக்கூடும் என்றும் விமர்சகர்கள் எச்சரிக்கின்றனர்.

மேலும், பல்வேறு பொலிஸ் மற்றும் அரச துறைகளுக்கு இடையே தரவுகளை தானாகப் பரிமாறிக்கொள்ள அனுமதிக்கும் நடைமுறையும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதன்மூலம் உயிரியல் அடையாளத் தரவுகள் (Biometric Data), குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் தகவல்கள் உள்ளிட்ட மிகவும் நுணுக்கமான தனிப்பட்ட தரவுகள் தேவையற்ற சந்தர்ப்பங்களிலும் அணுகப்படக்கூடும் என எதிர்ப்பாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

### சட்டத்தை நிறுத்துமாறு கோரிக்கை

இந்த முறையீட்டில் AL Zürich, Chaos Computer Club Zürich, Digitale Gesellschaft, JUSO Kanton Zürich மற்றும் SP Kanton Zürich உள்ளிட்ட அமைப்புகளும் பங்கேற்றுள்ளன.

மேலும், உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியாகும் வரை புதிய சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக Zürich மாநில அரசு தனது நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வாய்ப்பு பெறும்.

# Switzerland ஐ நிரந்தரமாக விட்டு வெளியேறுகிறீர்களா?

## மறக்கக்கூடாத முக்கிய நடவடிக்கைகள்



வேலை, ஓய்வுபெறுதல், சொந்த நாட்டிற்குத் திரும்புதல் அல்லது வேறு நாட்டில் புதிய வாழ்க்கையைத் தொடங்குதல் என எந்தக் காரணத்திற்காக Switzerland-ஐ நிரந்தரமாக விட்டு வெளியேறினாலும், விமானத்தில் ஏறுவதற்கு முன் பல நிர்வாக நடவடிக்கைகளை முடிக்க வேண்டியுள்ளது.

### வாடகை வீட்டில் வசிப்பவர்கள்

முதலில் உங்கள் வாடகை ஒப்பந்தத்தின் Kndigungsfrist – ஒப்பந்தத்தை முடிப்பதற்கான அறிவிப்பு காலத்தை சரிபார்க்க வேண்டும்.

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு முன்பே வெளியேறினால், சில சூழ்நிலைகளில் மாற்று வாடகையாளரை முன்மொழிய வேண்டியிருக்கலாம். வீட்டைக் கையளிக்கும் முன் சுத்தம் செய்தல், Parking உள்ளிட்ட தனி ஒப்பந்தங்களை முடித்தல் மற்றும் தேவையான காப்பீடுகளை சரியான தேதி வரை வைத்திருப்பதும் முக்கியம்.

### Gemeinde-யில் அனுட்னுடுஷீதனஞ் செய்யுங்கள்

Switzerland-ஐ நிரந்தரமாக விட்டு வெளியேறுபவர்களின் மிக முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்று வசிக்கும் எனுட்னுin-de-யில் Deregistration / Abmeldung செய்வது.

புறப்படுவதற்கு முன்பே இதைச் செய்ய முடியும்; நடைமுறை Gemeinde-க்கு Gemeinde மாறுபடலாம்.

இதன் பின்னர் கிடைக்கும் Abmeldebesttigung / Deregistration Certificate சுகாதாரக் காப்பீடு உள்ளிட்ட பல ஒப்பந்தங்களை முடிப்பதற்கு தேவைப்படலாம்.

வெளிநாட்டவர்கள் பொதுவாக Passport அல்லது ID, Residence Permit மற்றும் தேவையான பதிவு ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

### வரி விவகாரங்களை முடிக்கவும்

Switzerland-ஐ விட்டு வெளியேறும்போது செலுத்த வேண்டிய வரிகள் மீதமுள்ளனவா அல்லது பணம் திரும்பப் பெற வேண்டுமா என்பதை சம்பந்தப்பட்ட Steueramt உடன் சரிபார்ப்பது அவசியம்.

### Swiss Bank Account என்ன ஆகும்?

உங்கள் Swiss வங்கிக் கணக்கை வெளிநாட்டில் வாழ்ந்தபடியே வைத்திருக்க முடியுமா என்பதை வங்கியிடம் கேளுங்கள்.

சில வங்கிகள் வெளிநாட்டில் வசிப்பவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கலாம் அல்லது குறிப்பிட்ட நிபந்தனைகளை விதிக்கலாம்.

Direct Debit / Lastschrift போன்ற தானியங்கி கட்டணங்களையும் தனித்தனியாக ரத்து செய்வது முக்கியம்.

### B அல்லது C Permit வைத்திருப்பவர்கள்

Switzerland-ஐ விட்டு வெளியேறுவது உங்கள் Residence Permit மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை முன்கூட்டியே அதிகாரிகளிடம் கேட்டறிய வேண்டும்.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில், மீண்டும் Switzerland திரும்பத் திட்டமிடுபவர்கள் தங்களது அனுமதியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பாதுகாத்துக்கொள்ள விண்ணப்பிக்க வாய்ப்பு இருக்கலாம். இது தானாக கிடைக்கும் உரிமை அல்ல; அதிகாரிகளின் ஒப்புதல் தேவைப்படும்.

### Health Insurance-ஐ மறக்காதீர்கள்

Abmeldung செய்யப்பட்ட பின்னர் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கட்டாய Swiss Health Insurance முடிவுக்கு கொண்டுவரப்படலாம்.

ஆனால் உங்கள் தனிப்பட்ட சூழ்நிலை மற்றும் நீங்கள் செல்லும் நாட்டைப் பொறுத்து விதிகள் மாறக்கூடும். எனவே காப்பீட்டு நிறுவனத்துடன் நேரடியாக உறுதிப்படுத்த வேண்டும்.

### AHV மற்றும் Pension பணம் என்ன ஆகும்?

Switzerland-இல் வேலை செய்தவர்கள் தங்களது AHV/AVS மற்றும் இரண்டாம் தூண் Pension (Pensionskasse) தொடர்பான நிலையை கட்டாயம் சரிபார்க்க வேண்டும்.

நீங்கள் எந்த நாட்டிற்குச் செல்கிறீர்கள், உங்கள் குடியுரிமை என்ன, குwitzerland-உடன் அந்த நாட்டிற்கு உள்ள ஒப்பந்தங்கள் என்ன என்பவற்றைப் பொறுத்து பணத்தைப் பெறுதல் அல்லது தொடர்ந்து வைத்திருப்பதற்கான விதிகள் மாறுபடலாம்.

எனவே கஙுணண்டிணிண பணத்தை உடனடியாக முழுமையாக எடுத்துக்கொள்ளலாம் என்று கருதக்கூடாது.

### Swiss கார் மற்றும் Driving Licence

குதீடிண்ண் பதிவு கொண்ட வாகனத்தை எடுத்துச் செல்கிறீர்கள் என்றால் Strassenverkehrsamt மற்றும் வாகனப் பதிவு தொடர்பான நடவடிக்கைகளை சரிபார்க்க வேண்டும்.

Swiss Driving Licence புதிய நாட்டில் எவ்வளவு காலம் செல்லுபடியாகும் என்பதையும் முன்கூட்டியே தெரிந்துகொள்ளுங்கள்.

### ஒப்பந்தங்களை ரத்து செய்யுங்கள்

வீட்டை காலி செய்துவிட்டால் எல்லா ஒப்பந்தங்களும் தானாக முடிந்துவிடாது.

Mobile Phone, Internet, Insurance, SBB Travelcard, Parking, Memberships, Serafe/TV&Radio தொடர்பான பதிவு மற்றும் பிற subscriptions ஆகியவற்றை தனித்தனியாகச் சரிபார்க்க வேண்டும்.

குழந்தைகள் இருந்தால் பள்ளி, Kita போன்றவற்றுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும்.

### பொருட்கள், கார், செல்லப்பிராணிகள்

வீட்டு உபகரணங்கள், தனிப்பட்ட பொருட்கள், வாகனம் அல்லது செல்லப்பிராணிகளை வெளிநாட்டிற்கு எடுத்துச் சென்றால் Customs / Zoll விதிகளை முன்கூட்டியே சரிபார்க்க வேண்டும்.

செல்லப்பிராணிகளுக்கு தடுப்பூசி, Microchip, Pet Passport அல்லது பிற ஆவணங்கள் தேவைப்படலாம்.

### கடிதங்களை புதிய நாட்டிற்கு அனுப்பலாம்

Switzerland-இல் உங்கள் பழைய முகவரிக்கு வரும் கடிதங்களை புதிய வெளிநாட்டு முகவரிக்கு அனுப்ப Swiss Post mail forwarding service பயன்படுத்தலாம்.




# பிராந்திய ஊடகங்களைக் காப்பாற்ற Schaffhausen ல் வட்டமேசை மாநாடு

விளம்பர வருமானச் சரிவு மற்றும் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களின் அதிகரிக்கும் போட்டியால் பாதிக்கப்பட்டுள்ள பிராந்திய ஊடகங்களுக்கான தீர்வுகளை ஆராய, வட்டமேசை மாநாட்டை நடத்துமாறு Schaffhausen கான்டன் பாராளுமன்றம் அரசிடம் கோரியுள்ளது.

SP கட்சியைச் சேர்ந்த Linda De Ventura மற்றும் SVP கட்சியைச் சேர்ந்த Markus Mller சமர்ப்பித்த முன்மொழிவு, 40 ஆதரவு வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. ஏழு உறுப்பினர்கள் எதிர்த்ததுடன், ஐந்து பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து, உள்ளூர் பத்திரிகை மற்றும் செய்திச் சேவைகள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். ஜனநாயகத்திற்கு நம்பகமான உள்ளூர் செய்தியறிக்கை அவசியம் என முன்மொழிவாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நேரடியாக அரச நிதியுதவி வழங்குவது ஊடகச் சுதந்திரம் மற்றும் போட்டிச் சட்டத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என Schaffhausen அரசு தெரிவித்துள்ளது. ஆனால் பயிற்சி, விநியோகம், தொழில்நுட்பம் அல்லது பொதுச் சேவைகள் போன்ற மறைமுக உதவித் திட்டங்களைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளது.

அரசு சாத்தியமான உதவி முறைகளை ஆய்வு செய்து கான்டன் பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். தேவைப்பட்டால் புதிய சட்ட அடிப்படையும் உருவாக்கப்படும்.




# InterCity ரயில்களிலும் சாதாரண உடையில் SBB டிக்கெட் பரிசோதனை

சூரிச்: Switzerland-இல் SBB ரயில்களில் சாதாரண உடையில் அதிகாரிகள் மேற்கொள்ளும் திடீர் டிக்கெட் பரிசோதனை தற்போது InterCity ரயில்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

St. Gallen-இலிருந்து Zrich நோக்கிச் சென்ற IC5 InterCity ரயிலில், சாதாரண கோடை உடையில் பயணிகளைப் போல இருந்த SBB அதிகாரிகள் திடீரென பயணிகளிடம் டிக்கெட்டுகளைக் கேட்டுப் பரிசோதித்துள்ளனர்.

அதிகாரிகள் தங்களது அதிகாரப்பூர்வ SBB அடையாள அட்டையைக் காட்டிய பின்னரே அவர்கள் பரிசோதகர்கள் என்பது பயணிகளுக்குத் தெரியவந்துள்ளது.

SBB பேச்சாளர் Reto Schrli தெரிவித்ததன்படி, சில ரயில்களில் கூடுதல் பணியாளர்களைப் பயன்படுத்தி அவ்வப்போது சாதாரண உடையிலான திடீர் பரிசோதனைகள் (Zivile Stichproben) மேற்கொள்ளப்படுகின்றன.

செல்லுபடியாகும் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்பவர்களுக்கு சுமார் 75 Swiss francs முதல் கூடுதல் கட்டணம் விதிக்கப்படலாம். தவறான பயண வகுப்பு, மண்டலம் அல்லது ஏற்கனவே இது போன்ற விதிமீறல் பதிவாகியுள்ளதா என்பதற்கேற்ப தொகை மாறுபடும்.

சாதாரண உடையில் ஒருவர் டிக்கெட் அல்லது குதீடிண்ண்கச்ண்ண்-ஐ காட்டுமாறு கேட்டால், சந்தேகம் இருப்பின் அவரிடம் அதிகாரப்பூர்வ SBB புகைப்பட அடையாள அட்டையை (Ausweis) காட்டுமாறு பயணிகள் கேட்கலாம்.

இதற்கிடையில், டிக்கெட் வாங்குவதில் சில விநாடிகள் தாமதமான பயணிகளுக்கும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக எழுந்த விமர்சனங்களைத் தொடர்ந்து, நியாயமான சந்தர்ப்பங்களில் குஆஆ அதிக நெகிழ்வுடன் நடந்துகொள்ள வேண்டும் என நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

**பயணிகள் கவனத்திற்கு**

ரயில் அல்லது பஸ்ஸில் ஏறுவதற்கு முன்பே செல்லுபடியாகும் டிக்கெட்டை வாங்குவது அல்லது உச்ண்தூகீடிஞீனு-ஐ செயல்படுத்துவது அவசியம்.

# பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்ட IS ஆதரவாளரின் Switzerland குடியுரிமை பறிப்பு

பிரான்சில் பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்ட குற்றத்திற்காக 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற ஒருவரின் Switzerland குடியுரிமையைப் பறிக்கும் முடிவை கூட்டாட்சி நிர்வாக நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆணிண்ணடிச் - Herzegovina வில் பிறந்த இவர், 2000ஆம் ஆண்டு Switzerland குடியுரிமையைப் பெற்றதுடன் நீண்டகாலம் Yverdon&les&Bains பகுதியில் வசித்துள்ளார்.

IS அமைப்புக்கு ஆதரவு தெரிவித்த இவர், Nice உள்ளிட்ட பிரான்ஸ் நகரங்களில் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டதாக பிரான்ஸ் நீதிமன்றம் கண்டறிந்தது.

2021 ஜனவரியில் Paris நீதிமன்றம் அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

பயங்கரவாதச் செயற்பாடுகள் மூலம் Switzerland நாட்டின் நலன்களுக்கும் நற்பெயருக்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியதாகக் கூறி, அதே ஆண்டு மே மாதம் குடிவரவு அரச செயலகமான SEM அவரது குடியுரிமையைப் பறித்தது. SEM எடுத்த முடிவு சட்டபூர்வமானது என தற்போது கூட்டாட்சி நிர்வாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இருப்பினும் இந்தத் தீர்ப்பை எதிர்த்து Switzerland கூட்டாட்சி உச்ச நீதிமன்றத்தில் மேல்

# Liechtenstein Cyber Attack - 31,000 நிறுவனங்களின் தரவுகள் பாதிப்பு

Liechtenstein-இல் பொருளாதார ரீதியாக உரிமை கொண்ட நபர்களின் பதிவேட்டின் மீது ஜூலை இறுதியில் நடத்தப்பட்ட கடுமையான Cyber Attack தொடர்பாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 31,000 சட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் தொடர்பான தரவுகள் சட்டவிரோதமாகப் பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. Liechtenstein-ஐச் சேர்ந்த IT நிறுவனமான Aviita வழங்கியதாகக் கூறப்படும் Software-இல் இருந்த பாதுகாப்புக் குறைபாடு தாக்குதலுக்கு வழிவகுத்திருக்கலாம் என்று Sonntags-Blick செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் Liechtenstein அரசும் Aviita நிறுவனமும் தங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை. தனது சொந்த அமைப்புகள் மீது Hacker Attack கண்டறியப்படவில்லை என Aviita CEO தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்குப் பின்னால் யார் உள்ளனர் என்பது இன்னும் தெளிவாகவில்லை. விசாரணைக்கு ஜெர்மனி, Switzerland மற்றும் அமெரிக்க அதிகாரிகளின் உதவியை Liechtenstein நாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


20
மயூரன் - தேன்மொழி
20 வது
ஆண்டு திருமண நல்வாழ்த்துக்கள்!
Supeedsam Media Network

# லாங்கென்தால் நகரத் தலைவர் பதவிக்கு SP-SVP நேரடி மோதல்




லாங்கென்தால் நகரத்தின் அடுத்த தலைவரைத் தீர்மானிக்கும் முக்கிய இடைத்தேர்தல் ஆகஸ்ட் 30 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. SP கட்சியின் Roland Loser மற்றும் SVP கட்சியின் Patrick Freudiger ஆகியோர் நேரடியாகப் போட்டியிடுகின்றனர்.

இதுவரை நகரத் தலைவராக இருந்த Reto Müller (SP), இந்த வசந்தகாலத்தில் பேர்ன் மாநில அரசாங்கத்திற்கு தேர்ந்தெ டுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

SVP வேட்பாளர் Patrick Freudiger

41 வயதான வழக்கறிஞர் Patrick Freudiger, பேர்ன் மாநில அரசியலில் நன்கு அறியப்பட்டவர். 2014 முதல் SVP சார்பில் பேர்ன் மாநில நாடாளுமன்றமான Grosser Rat உறுப்பினராக உள்ள அவர், கடந்த இரண்டு ஆண்டுகளாக அதன் முக்கியமான நிதிக்குழுவிற்குத் தலைமை வகித்து வருகிறார்.

2025 முதல் லாங்கென்தால் நகர நிர்வாகத்தில் நிதித்துறைக்குப் பொறுப்பாக உள்ளார். இவருக்கு SVP, FDP மற்றும் Jungfreisinnige கட்சிகள் ஆதரவு வழங்குகின்றன.

SP வேட்பாளர் Roland Loser

57 வயதான Roland Loser, இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து சமூக நலன், முதியோர் விவகாரங்கள் மற்றும் சுகாதாரத்துறைக்குப் பொறுப்பான நகர நிர்வாக உறுப்பினராக செயல்பட்டு வருகிறார்.

இதற்கு முன்னர் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நகர நாடாளுமன்றத்தில் பணியாற்றிய அவர், தொழில்முறையில் ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணை உரிமை யாளராக உள்ளார்.

“Langenthal kann mehr” - “லாங்கென்தால் இன்னும் அதிகம் சாதிக்க முடியும்” என்பது அவரது தேர்தல் முழக்கம். அவருக்கு SP மற்றும் பசுமைக் கட்சி ஆதரவு வழங்குகின்றன.

நீண்ட அரசியல் வரலாறு

லாங்கென்தால் நகரத் தலைவர் பதவி பல தசாப்தங்களாக FDP வசம் இருந்தது. பின்னர் Thomas Rufener (SVP) 2016 வரை பதவி வகித்தார். அதன்பின் Reto Müller தலைமையில் SP நகரத் தலைவர் பதவியைக் கைப்பற்றியது.

தற்போது துணை நகரத் தலைவர் Michael Schär (FDP) இடைக்காலமாக தலைமைப் பொறுப்புகளை கவனித்து வருகிறார்.

# 2027 தேர்தல்: SP இன்னும் வலுவடைய வேண்டும்

# Mattea Meyer - Cdric Wermuth இணைத் தலைமையின் புதிய தேர்தல் வியூகம்



Switzerland கூட்டாட்சித் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு இருக்கும் நிலையில், SP (Social Democratic Party) தனது 2027 தேர்தல் வியூகத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது.

கட்சியின் இணைத் தலைவர்களான Mattea Meyer மற்றும் Cédric Wermuth, அடுத்த தேர்தலில் SP மேலும் வலுவடைந்து அதிக வாக்காளர் ஆதரவைப் பெற வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

### இடதுசாரிப் பாதை குறித்து விமர்சனம்

மிதமான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்ட Daniel Jositsch உடனான முறிவுக்குப் பின்னர், SP கடுமையான இடதுசாரிப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

ஆனால் இந்த விமர்சனங்களை Meyer-Wermuth இணைத் தலைமை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. தற்போதைய அரசியல் பாதையே 2027 தேர்தலில் வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கையில் அவர்கள் உள்ளனர்.

### காப்பீட்டு பிரீமியம் முக்கிய தேர்தல் விவகாரம்

Switzerland-இல் தொடர்ந்து அதிகரித்து வரும் சுகாதாரக் காப்பீட்டு பிரீமியங்கள் குடும்பங்களின் செலவுச் சுமையை அதிகரித்துள்ளன.

இதைக் குறிவைத்து SP புதிய Prämien-Initiative ஒன்றை முன்னெடுக்கிறது. இந்த முயற்சி மக்களிடம் ஆதரவைப் பெற்று, தேர்தலிலும் கட்சிக்கு சாதகமாக அமையும் என Meyer மற்றும் Wermuth நம்புகின்றனர்.

### 2027-ஐ குறிவைக்கும் SP

வாழ்க்கைச் செலவு, சுகாதாரக் காப்பீடு மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி தேர்தலைச் சந்திக்க SP தயாராகிறது.

«Die SP muss stärker werden» - “SP இன்னும் வலுவடைய வேண்டும்” என்பதே 2027 தேர்தலை நோக்கிய கட்சித் தலைமையின் முக்கிய செய்தியாக உள்ளது.




# 2027 தேர்தலை குறிவைக்கும் SVP: ஒரே இலக்கு மேலும் வளர வேண்டும்

குடியேற்றம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவு ஆகியவற்றை முக்கிய தேர்தல் பிரச்சினைகளாக முன்வைக்கவுள்ளதாக கட்சித் தலைவர் Marcel Dettling தெரிவித்துள்ளார்.

Switzerland கூட்டாட்சித் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு இருக்கும் நிலையில், SVP (Schweiz-erische Volkspartei) தனது தேர்தல் வியூகத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது. தற்போது கட்சிக்கு சாதகமான அரசியல் சூழல் காணப்படுவதாகக் கருதும் SVP தலைவர் Marcel Dettling, அடுத்த தேர்தலில் மேலும் வாக்காளர் ஆதரவை அதிகரிப்பதே இலக்கு எனக் கூறியுள்ளார்.

«Es gibt nur ein Ziel – weiter zulegen» – «ஒரே ஒரு இலக்குதான் உள்ளது; மேலும் வளர வேண்டும்» என்று Dettling தெரிவித்துள்ளார்.

2027 தேர்தலிலும் SVP தனது நீண்டகால முக்கிய அரசியல் விடயங்களான குடியேற்றம் (Migration) மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான Switzerland-இன் உறவு (EU) ஆகியவற்றையே முன்னிலைப்படுத்தவுள்ளது.

குடியேற்றம் அதிகரிப்பதால் வீடமைப்பு, போக்குவரத்து, கல்வி மற்றும் பிற உள்கட்டமைப்புகள் மீது ஏற்படும் அழுத்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டை SVP தொடர்ந்து வலியுறுத்தவுள்ளது.

அதேபோல், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவில் Switzerland-இன் சுயாதீனம் மற்றும் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் தேர்தல் பிரசாரத்தின் முக்கிய அம்சமாக கட்சி முன்வைக்கவுள்ளது.

புதிய அரசியல் தலைப்புகளைத் தேடுவதற்குப் பதிலாக, கடந்த காலங்களில் வாக்காளர்களிடம் ஆதரவைப் பெற்ற குடியேற்றம் மற்றும் EU தொடர்பான தனது பாரம்பரிய நிலைப்பாடுகளையே தொடர்ந்து முன்னெடுக்க SVP திட்டமிட்டுள்ளது.

2027 தேர்தலில் தற்போதைய ஆதரவைத் தக்கவைத்துக்கொள்வது மட்டுமல்லாமல், மேலும் வாக்குகளைப் பெற்று தனது அரசியல் பலத்தை அதிகரிப்பதே SVP-யின் இலக்கு என Marcel Dettling தெளிவுபடுத்தியுள்ளார்.




# தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு Die Mitte-க்கு இரண்டாவது Bundesrat இடம் வேண்டும்

## கட்சித் தலைவர் Bregy

2027 Switzerland கூட்டாட்சித் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு மட்டுமே உள்ள நிலையில், Die Mitte கட்சி தனது அரசியல் இலக்குகளைத் தெளிவுபடுத்தத் தொடங்கியுள்ளது.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக கட்சியை வழிநடத்தி வரும் தலைவர் Philipp Matthias Bregy, Die Mitte-க்கு இரண்டாவது Bundesrat இடம் கிடைப்பது Switzerland-க்கு நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

### தற்போது ஒரே Bundesrat இடம்

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட Switzerland கூட்டாட்சி அரசில் Die Mitte சார்பில் தற்போது Martin Pfister இடம்பெற்றுள்ளார்.

ஆனால் எதிர்வரும் 2027 தேர்தலில் கட்சி தனது வாக்காளர் ஆதரவையும் நாடாளுமன்ற பலத்தையும் அதிகரித்தால், இரண்டாவது Bundesrat இடத்திற்கான கோரிக்கை வலுப்பெறலாம்.

### தேர்தலை நோக்கி புதிய வியூகம்

Bregy தலைமையில் Die Mitte தனது தனித்துவமான அரசியல் நிலைப்பாட்டை மேலும் தெளிவாக வெளிப்படுத்த முயற்சிக்கிறது.

இடது மற்றும் வலதுசாரி அரசியல் அணிகளுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்தக்கூடிய மத்திய அரசியல் சக்தியாக தன்னை நிலைநிறுத்துவதே கட்சியின் முக்கிய நோக்கமாக உள்ளது.

### 2027 தேர்தல் என்ன மாற்றத்தைக் கொண்டுவரும்?

Die Mitte தனது வாக்காளர் ஆதரவை அதிகரிக்குமா?

இரண்டாவது Bundesrat இடத்தைப் பெறும் அளவுக்கு கட்சி வலுப்பெறுமா?

2027 கூட்டாட்சித் தேர்தல் இதற்கான பதிலைத் தீர்மானிக்கும்.




# தேர்தலுக்கு ஓராண்டு: புதிய தோற்றத்துடன் களமிறங்கும் FDP

Switzerland-இன் அடுத்த கூட்டாட்சி தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு இருக்கும் நிலையில், FDP - Die Liberalen கட்சி புதிய தோற்றத்துடனும் புதிய அரசியல் அணுகுமுறையுடனும் தேர்தல் ஆண்டைத் தொடங்குகிறது.

கடந்த கூட்டாட்சி தேர்தலுக்குப் பின்னர் பல கண்டோன் தேர்தல்களில் FDP தொடர்ந்து இடங்களை இழந்து வந்துள்ளது. இதனால் கட்சியின் ஆதரவை மீண்டும் அதிகரிப்பது புதிய இணைத் தலைமையின் முக்கிய சவாலாக மாறியுள்ளது.

கட்சியின் இணைத் தலைவர்களான Benjamin Mühlemann மற்றும் Susanne Vincenz-Stauffacher தலைமையில் FDP தனது அரசியல் செய்தியையும் பொதுமக்களிடம் தோன்றும் விதத்தையும் புதுப்பிக்க முயற்சிக்கிறது.

«Reduziert aufs Maximum» - "அதிகபட்ச தாக்கத்திற்கு எளிமைப்படுத்துதல்" என்ற அணுகுமுறையுடன், வாக்காளர்களுக்கு தெளிவான செய்திகளை வழங்கி இழந்த ஆதரவை மீட்டெடுப்பதே கட்சியின் இலக்காக உள்ளது.

2027 கூட்டாட்சி தேர்தலை நோக்கிய பயணத்தில், FDP-யின் இந்த புதிய முயற்சி வாக்காளர்களிடம் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அடுத்த சில மாதங்களில் தெரியவரும்.



# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கு மூன்று கோடி பெறுமதியான சித்திரத் தேரிற்கான ஆரம்ப நிகழ்வு!!

*(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)*

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றீஸ்வர் ஆலயத்திற்கு அமையவிருக்கும் புதிய அலங்கார சித்திர தேரிற்க்கான ஆரம்ப நிகழ்வு இன்று (23.08.2026) திகதி இடம்பெற்றது.

கொக்கட்டிச்சோலை அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றீஸ்வர் ஆலயத்தின் தலைவர் வண்ணக்கர் இ.மேகராசா அவர்களது தலைமையில் இடம் பெற்ற ஆரம்ப நிகழ்வானது ஆலயத்தின் தலைமை குருக்கள் சிவஸ்ரீ மு.கு.சச்சுதானந்த குருக்கள் தலை மையில் விசேட பூசையுடன் ஆரம்பமாகியது.

அமையப்பெறவுள்ள சித்திர தேருக்கான ஆரம்ப நிகழ்வாக தேருக்கான அடிச்சட்டத்திற்கு விசேட அபிசேகம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் இடம் பெற்றதனைத் தொடர்ந்து

தேரிற்கான அனுசரனையாளர்களான கோயில் போரதீவைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும்மா ர்க்கண்டு நேசராசா குடும்ப த்தினரினால் ஆலய அறங்காவலர்களிடம் தேரின் அடிச்சட்டம் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து தேரினை வடிவமைக்கவுள்ள சிப்பாற்சாரி சந்திரமோகன் அவர்கள் உள்ளிட்ட சிற்பாச்சாரியார் குழுவினர் தேரிற்கான ஆரம்ப வேலையினை சுப வேளையில் ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த பூசை நிகழ்வுகளில் மார்க்கண்டு நேசராசா குடும்பத்தின் உறுப்பினர்கள், பிரபல தொழிலதிபரும் தேசியஜோதி Dr.பீ.நல்லரெத்தினம், வெல்லாவெளி பிரதேச செயலாளர், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர், செயலாளர் வண்ணக்கர் சி.கங்காதரன்,

பொருளாளர் வண்ணக்கர் ச.கோகுலகிருஷ்ணன், ஆலய அறங்காவலர் சபை உறுப்பினர்கள், பொது மக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டு கொக்கட்டிச்சோலை அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றீஸ்வரப் பெருமானின் அருள்கடாற்சத்தினை பெற்றிருந்தனர்.

ஈழ மணித்திருநாடு என்று அழைக்கப்படும் இலங்கை தேசத்தின் கிழக்கிழங்கையின் தேரோடும் ஆலயம் என்று வர்ணிக்கப்படும் கொக்கட்டிச்சோலை அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றீஸ்வர் ஆலயத்தின் சித்திரத் தேர் சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக காணப்படுவதனால் குறித்த சித்திரத் தேரிற்கு பதிலான புதிய தேரினை சுமார் மூன்று கோடி ரூபாய் செலவில் மட்டக்களப்பு கோயில் போரதீவைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் மார்க்கண்டு நேசராசா குடும்பத்தினர் முழு அனுசரனையினை வழங்கியுள்ளனர்.

அதே வேளை கொக்கட்டிச்சோலை அருள்மிகு ஸ்ரீ தான்தோன்றீஸ்வர் ஆலயத்தினை பூரண கருங்கல்லிலாலான ஆலயமாக மாற்றியமைக்கும் பணிகள் மிக மும்முரமாக தற்போது இடம் பெற்றுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் மாநாட்டில் கலந்து கொள்வதற்கான கலந்துரையாடல்!

*( வி.ரி. சகாதேவராஜா)*

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் முப்பதாம் தேதி நடைபெற இருக்கும் சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தின சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று காரைதீவில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் நடைபெற்ற அந்த கலந்துரையாடலில் யாழ்.பயணம் பற்றி பூரண விளக்கமளித்தார்.

காரைதீவு பிரதேச சபையின் நூலக மேல் மாடியில் நேற்று முன்தினம் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

கூட்டத்தில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சு.பாஸ்கரன், முன்னாள் தவிசாளர் கே. ஜெயசிறில், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன், சங்க ஆலோசகர் ரி.பிரதீபன் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 30ஆம் தேதி சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தினம் . அன்றைய தினம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் இடம்பெற இருக்கின்றது.

வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் இருந்தும் அங்கு பலாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூட இருக்கின்றார்கள். இங்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் 600 தாய்மார்கள் இறந்தமை வரலாற்று நூல் வெளியிடப்பட இருக்கிறது .மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் பாவித்த அரிய பொருட்கள் கண்காட்சிக்கு வைக்க ப்படவிருக்கிறது .

எனவே அதற்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்து பல தரப்பினரையும் இந்த சர்வதேச மாநாட்டுக்காக அழைத்து செல்ல ஏற்பாடு செய்யவேண்டும். அதற்காக பலரது உதவியையும் நாடி நிற்கிறோம் என்றார்.



# சர்வதேச நெறிமுறைகளை பின்பற்ற மாட்டோம் என்ற அரசாங்கம் சர்வதேச வலிந்துபோன ஆட்கள் தினத்தை ஏன் கொண்டாடுகின்றது?




*(வாஸ் கூஞ்ஞ)*

ஒரு நாட்டின் சர்வதேச நெறிமுறைகளை பின்பற்ற மாட்டோம் என்ற அரசாங்கம் சர்வதேச வலிந்துபோன ஆட்கள் தினத்தை ஏன் நடத்துகின்றது? அவர்களின் சட்டத்திட்டங்கள் எமக்குத் தேவைப்படாது என்றவர்கள் ஏன் இதைக் கொண்டாட வேண்டும் என சிவில் சமூக குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர் யாழ் பகுதியைச் சேர்ந்த கம்சிக்கா ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடுகின்றது.

இத்தினத்தை முன்னிட்டு வடக்கில் உள்ள யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் உறவினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து திங்கள் கிழமை (24.08) மாலை மன்னாரில் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது

இச்சந்திப்பில் செவ்வாய்கிழமை 25.08.2026 அன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்படும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் மற்றும் அரச கட்டமைப்புகள் முன்னெடுக்கும் தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் தற்போதைய நிலை எதிர்பார்ப்புகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாகவும் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில் இவ்வூடக சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இச்சந்திப்பின்போது யாழ்ப்பாணம்- புங்குடுதீவு- கிளிநொச்சி மற்றும் மன்னார் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக சிவில் சமூக குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர் யாழ் பகுதியைச் சேர்ந்த கம்சிக்கா ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

காணாமல்போன உறவுகளை தேடுவதற்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை கொண்டாடுகின்றது.

ஒரு நாட்டின் சர்வதேச நெறிமுறைகளை பின்பற்ற மாட்டோம் என்ற அரசாங்கம் சர்வதேச வலிந்துபோன ஆட்கள் தினத்தை ஏன் நடத்துகின்றது? அவர்களின் சட்டத்திட்டங்கள் எமக்குத் தேவைப்படாது என்றவர்கள் ஏன்



இதைக் கொண்டாட வேண்டும்.

சர்வதேசத்திற்கு நாங்கள் இவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்து விட்டோம் இங்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு விட்டது என்று வெளிப்படுத்தும் நோக்குடன் சம்பிரதாய முறைப்படி இதைக் கொண்டாடுகின்றோம் என்பதற்காகவே இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதை கொண்டாடுவதற்கு இவர்கள் என்ன செய்திருக்க வேண்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை ஒவ்வொரு வருடத்திலாவது விடுவித்திருக்க வேண்டும். இவர்களை விடுப்பிப்பதற்காக போராடிக் கொண்டிருக்கும் அம்மாமாருக்கு அவர்களின் பிள்ளைகளை திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும்

ஆனால் இதை ஒன்றும் செய்யாமல் கண் துடைப்புக்காக இந்த நிகழ்வை செய்கின்றார்கள் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம். இந்த ஓஎன்பியானது எமது மக்களிடையே ஒரு தோல்வி கண்ட ஒரு அலுவலகமாகவே இருக்கின்றது. வலிந்து காணாமல் போனவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று கொடுப்பனவுகளை வழங்கி பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரத்தெண்டிக்கின்றது.


ஆனால் எங்கள் உறவுகள் கேட்பது இந்த நஷ்டஈடுகளை அல்ல. மாறாக எங்கள் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் என்றும் அல்லது எங்கள் பிள்ளைகளை கொன்று விட்டோம் என்று சர்வதேசத்திடம் ஒத்துக் கொள்ளுங்கள்.

அதைவிடுத்து பிரச்சனையை மூடி மறைக்கப் பார்க்கின்றீர்கள். அம்மாமாரின் போராட்டங்களோடு இது முடியும் பிரச்சனை அல்ல. ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிவில் சமூகங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே எப்பொழுது யாரால் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற தரவுகளை கொண்டதாக புத்தங்களாக கிளிநொச்சி வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சிவில் சமூகங்களால் உருவாக்கி வைத்துள்ளனர்.

இந்த புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு தரவுகளும் இவர்களின் உறவுகளின் மன வேதனை. இவ்வாறு இருக்க நீங்கள் நஷ்டஈடு கொடுக்கின்றீர்கள். இது தொடர்பான தினத்தை கொண்டர்டுகின்றீர்கள். எங்களுக்கு நஷ்டஈடு வேண்டாம். மாறாக காணாமல் ஆக்கப்பட்வர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலே அவசியமானது. நாங்கள் கோருகின்ற வெளிநாட்டு பொறிமுறைகளும் அதற்கான தனியான நீதிமன்றமும் சர்வதேச கண்காணிப்புடன் நடவடிக்கைகளையே கோரி நிற்கின்றோம்.

இதைவிடுத்து சர்வதேச தின கொண்டாடத்தை நாங்கள் எற்றுக்கொள்ளவில்லை. இந்த நிகழ்வை கொண்டாடும் அரசாங்கம் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துங்கள் விடுவிக்கப்பட்டதாக கூறப்படுபவர்களின் தரவுகளை தாருங்கள் அப்பொழுதுதான் இந்த சர்வதேச தினம் அர்த்தமுள்ளதாக அமையும் என இவ்வாறு தெரிவித்தார்.

# மு.சிவலிங்கத்தின் வாழ்நாள் சாதனையை கௌரவிக்கும் அமுதவிழா




மலையகத்தின் கலை, இலக்கியம், சிற்கதை, நாவல், நாடகம், திரைப்படம், தொழிற்சங்கம், அரசியல், மொழி பெயர்ப்பு என பன்முக ஆளுமை கொண்ட மூத்த எழுத்தாளரும், கலாபூஷணம் மற்றும் சாகித்ய ரத்னா விருதுகள் பெற்றவருமான மு.சி. என்று சிறப்பிக்கப்படும் மு.சிவலிங்கத்தின் அமுதவிழா நிகழ்வுகள் இம்மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை பூரணை தினத்தன்று அட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய கலையரங்கத்தில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது. மங்கல விளக்கேற்றல் மற்றும் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவர்களின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகும் அமுதவிழா நிகழ்வில் மல்லியப்பூசந்தி திலகரின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கவிஞர் சு. முர ளிதரன் தலைமையுரை நிகழ்த்துவார்.

நிகழ்வில் "சிவாமுதம்" சிறப்பிதழ் வெளியீட்டில் கலாநிதி பெ. சரவணகுமார் சிவாமுதம் இதழின் கலை, இலக்கியப் பார்வை என்ற தலைப்பிலும், கலாநிதி எம்.எம். ஜெயசீலன் அரசியல், சமூகப் பார்வை என்ற தலைப்பிலும், துரை. மதியுகராஜா மாகாண சபை உப தலைவராக மு.சி. என்ற தலைப்பிலும், பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன் ஈழத்து தமிழ் இலக்கிய பரப்பில் மு.சி. என்ற தலைப்பிலும், சந்திரலேகா கிங்ஸ்லி மு.சி. யின் சமுக, அரசியல் தடம் என்ற தலைப்பிலும், சிராஜ் மஹூர் சக சமூகப் பார்வையில் மு.சி.யின் சமூகப் பணி என்ற தலைப்பிலும், சிவா பரமேஸ்வரன் சர்வதேச தமிழர் தளத்தில் மு.சி. என்ற தலைப்பிலும், ஹேமச்சந்திர பத்திரன சக சமூகப் பார்வையில் மு.சி.யின் இலக்கியப் பணி என்ற தலைப்பிலும், சு.தவச்செல்வன் மு.சி.யின் கலை இலக்கியத் தடம் என்ற தலைப்பிலும் கருத்துரை நிகழ்த்துவார்கள்.. தொடர்ந்து பொன். பிரபாகரன் நெறியாள்கையில், மு.சி,யின் "ஒப்பாரிக் கோச்சி" சிறுகதை நாடகமும், மு. சி.யின் வாழ்க்கைச் சுவடு திரைக்காட்சியும், மலையகத் தமிழ்ச்சங்கம் மு.சி.க்கு வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் கௌரவமும் இடம்பெற்று மு. சிவா னந்தனின் நன்றியுரையுடன் நிறைவு பெறும்.




சூரிச்: செயற்கை நுண்ணறிவு பயன்பாடு வேகமாக அதிகரித்து வரும் நிலையில், Switzerland உட்பட ஐரோப்பாவின் பல நாடுகளில் ChatGPT-இல் விளம்பரங்கள் (Ads) அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

நிஊணீனுணஅஜ அறிவிப்பின்படி, ஆகஸ்ட் 24 முதல் 30 வரையிலான வாரத்தில், Switzerland உட்பட 31 ஐரோப்பிய நாடுகளுக்கு விளம்பர வசதி விரிவுபடுத்தப்படவுள்ளது. Germany, France, Italy, Spain, Netherlands, Austria, Sweden, Norway, Denmark உள்ளிட்ட நாடுகளும் இதில் அடங்குகின்றன.

## Free, Go பயனர்களுக்கே விளம்பரம்

ChatGPT-இன் Free மற்றும் Go திட்டங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு விளம்பரங்கள் காண்பிக்கப்படலாம். Plus, Pro மற்றும் Enterprise போன்ற விளம்பரமற்ற திட்டங்களைப் பயன்படுத்துவோருக்கு இவை காண்பிக்கப்படாது.

விளம்பரங்கள் Cha-t-G-PT வழங்கும் பதில்களுக்குள் கலக்கப்படாமல், தனியாகவும் தெளிவாக "Sponsored' என அடையாளப்படுத்தப்பட்டும் காட்டப்படும்.

உரையாடல்கள் விளம்பர நிறுவனங்களுக்கு வழங்கப்படாது பயனர்களின் தனியுரிமை தொடர்பாக Op-e-n-AI முக்கிய விளக்கத்தையும் வழங்கியுள்ளது.

பயனர்களின் இடச்ஞுளைககூ உரையாடல்கள் விளம்பரதாரர்களுடன் பகிரப்படாது; பயனர் தரவுகளும் விளம்பர நிறுவனங்களுக்கு விற்கப்படாது என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், காட்டப்படும் விளம்பரங்கள் ChatGPT வழங்கும் பதில்களைப் பாதிக்காது என்றும் OpenAI கூறுகிறது.

உதாரணமாக, ஒருவர் காபி இயந்திரம் வாங்குவது தொடர்பாக ChatGPT-யிடம் ஆலோசனை கேட்டால், முதலில் வழக்கமான பதில் வழங்கப்பட்டு, அதன் கீழ் தனியாக அடையாளப்படுத்தப்பட்ட விளம்பரம் தோன்றக்கூடும்.

## ஐரோப்பாவில் பெரிய விரிவாக்கம்

அமெரிக்கா உள்ளிட்ட சில சந்தைகளில் சோதிக்கப்பட்டு வந்த ChatGPT விளம்பர முறை தற்போது ஐரோப்பாவுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. உலகளவில் பெரும்பாலான ChatGPT பயனர்கள் இலவசத் திட்டத்தையே பயன்படுத்துவதால், இந்த மாற்றம் அதிக எண்ணிக்கையிலான பயனர்களை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# லூசேர்னில் புதிய அரசியல் அத்தியாயம் EDU மாகாணக் கிளை ஆரம்பம்

Switzerland-ன் லூசேர்ன் மாகாணத்தில் Eidgen5ssisch&Demokratische Union (EDU) கட்சி தனது புதிய மாகாணக் கிளையை நிறுவியுள்ளது. மத்திய Switzerland பகுதியில் Zug-க்கு அடுத்ததாக ஊக் அமைப்புக் கிளை உருவாகும் இரண்டாவது மாகாணம் லூசேர்னாகும்.

புதன்கிழமை மாலை Ruswil பகுதியில் உள்ள Restaurant R5ssli-யில் நடைபெற்ற கூட்டத்தில் 48 பேர் கலந்து கொண்டு EDU Luzern கிளையை அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்ததாக கட்சி தெரிவித்துள்ளது. புதிய மாகாணக் கிளையின் தலைவராக Hansj5rg Roth நியமிக்கப்பட்டுள்ளார்.

EDU Luzern தனது அரசியல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மதிப்புகளை வலுப்படுத்துவது, குடும்பங்களுக்கு ஆதரவான கொள்கைகளை முன்னெடுப்பது ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. அதேபோல் அறிவு, வழிகாட்டுதல் மற்றும் தனிப்பட்ட பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் கல்விக் கொள்கைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

EDU கட்சி Switzerland முழுவதும் சுமார் 16 மாகாணங்களில் செயற்படுவதாக கட்சியின் முந்தைய தகவல்கள் தெரிவிக்கின்றன. Zug மாகாணக் கிளை 2025 ஜனவரி இறுதியில் தொடங்கப்பட்ட நிலையில், தற்போது Luzern கிளையும் இணைந்துள்ளது.

எனினும், நாடு முழுவதிலும் EDU சில மாகாண நாடாளுமன்றங்களில் மட்டுமே பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது. மத்திய Switzerland பகுதியின் எந்த மாகாண நாடாளுமன்றத்திலும் தற்போது ஊக் உறுப்பினர்கள் இல்லை.

# ஓட்டுநர் பற்றாக்குறையால் Tram 6,10 சேவை விரிவாக்கம் ஒத்திவைப்பு

Zuerich நகர போக்குவரத்து நிறுவனமான VBZ, Tram 6 மற்றும் Tram 10 வழித்தடங்களின் திட்டமிட்ட விரிவாக்கத்தை ஒத்திவைத்துள்ளது. போதுமான அளவு ஓட்டுநர் பணியாளர்கள் இல்லாததே இதற்குக் காரணமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்த இரு Tram சேவைகளும் 13 டிசம்பர் 2026 முதல் விரிவாக்கப்படவிருந்தன. தற்போது புதிய தொடக்க தேதி 10 மே 2027 என அறிவிக்கப்பட்டுள்ளது.

Tram 6 சேவை Letzi grund வரை நீட்டிக்கப்படவுள்ளது.

Tram 10 சேவை Bah nhof Enge வரை செல்லும் வகையில் விரிவாக்கப்படும். தற்போது இரு சேவைகளும் Hauptbahnhof பகுதியில் முடிவடைகின்றன.

அதேவேளை, டிசம்பர் 13ஆம் தேதி நடைபெறவுள்ள ஏனைய அட்டவணை மாற்றங்கள் திட்டமிட்டபடி அமுல்படுத்தப்படும். Bahnhofquai மீண்டும் திறக்கப்பட்டதும் Tram 4, 11, 13, 14 மற்றும் 17 தமது வழக்கமான பாதைகளில் இயங்கும்.




# Zuerich Hardturm தனிக் காவல் கோபுரமல்ல

## கோட்டையின் ஒரு பகுதி!

Zrich |கரின் Fischerweg பகுதியில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் பழைமையான சுற்றுமதிலின் எச்சங்களும், கோட்டையைச் சுற்றியிருந்த பாதுகாப்பு அகழியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, 15 மீற்றர் உயரமான Hardturm இதுவரை Limmat ஆற்றங்கரையில் அமைந்திருந்த தனித்த காவல் அல்லது பாதுகாப்புக் கோபுரம் எனக் கருதப்பட்டது. புதிய ஆதாரங்களின்படி அது தாழ்நிலத்தில் அமைந்திருந்த ஒரு முழுமையான கோட்டையின் பகுதியாக இருந்திருக்கலாம்.

மலை போன்ற இயற்கைப் பாதுகாப்பு இல்லாத இத்தகைய தாழ்நிலக் கோட்டைகள், ஆறு, அகழி மற்றும் சுற்றுமதில்களைத் தற்காப்புக்காகப் பயன்படுத்தியுள்ளன. சுமார் 10 மீற்றர் நீளமும் மூன்று மீற்றர் ஆழமும் கொண்ட கட்டுமானக் குழியிலேயே இந்த எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இடைக்காலத்தில் Limmat ஆற்றைக் கடக்கும் பாதையைக் கட்டுப்படுத்தியவர்கள் வர்த்தகத்தையும் போக்குவரத்தையும் கட்டுப்படுத்த முடிந்ததால், Hardturm மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்ததாகத் தொல்லியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Fischerweg பகுதியில் குடிநீர்க் குழாய்கள் புதுப்பிக்கப்பட்டபோது இந்த ஆய்வு தொடங்கியது. அகழ்வாராய்ச்சியின் முடிவுகள் பின்னர் பொதுமக்களுக்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.



# 36 ஆண்டுகள் கடந்தும் அந்தக் கேள்வி இன்னும் அங்கேயே உள்ளது

கஜனா சந்திரபோஸ்

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள வீரமுனை, சம்மாந்துறையை அடுத்து காரைதீவிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் அம்பாறை வீதிப் பகுதியில் அமைந்துள்ள ஒரு பழமையான தமிழ் கிராமமாகும். வீரமுனையின் வடக்கே சொறிக்கல்முனை அமைந்துள்ளதுடன், கிராமத்தைச் சுற்றிலும் பரந்த வயல் நிலங்கள் இயற்கைச் சூழலாக காணப்படுகின்றன. இயற்கை வளமும் வரலாற்றுப் பின்னணியும் கொண்ட இக்கிராமம், பல தலைமுறைகளாகத் தமிழர்கள் வாழ்ந்து வந்த ஒரு குடியேற்றப் பகுதியாகவும் குறிப்பிடப்படுகிறது.

### வீரமுனையின் வரலாற்றுப் பின்னணி

வீரமுனையின் தோற்றம் தொடர்பாக உள்ளூர் வரலாற்று மரபில் பல்வேறு செய்திகள் கூறப்படுகின்றன. ஈழ மன்னன் வாலசிங்கன், சோழ நாட்டின் இளவரசியான சீர்பாத தேதியாரை திருமணம் செய்து கொண்டு சமுத்திரத்தைக் கடந்து மட்டக்களப்பு வாவியூடாக வந்து கரைதட்டிய இடமே வீரமுனை என ஒரு மரபுச் செய்தி கூறுகிறது.

வீரமுனை பழமையான குடியேற்றப் பகுதியாகவும், நந்தேனியா அல்லது நாடுகாடு எனவும் வரலாற்றுச் சுட்டுகளில் குறிப்பிடப்பட்டதாக உள்ளூர் வரலாற்று மரபுகள் தெரிவிக்கின்றன. இதனால் வீரமுனை என்பது அண்மைக்காலத்தில் உருவான குடியேற்றம் அல்ல; நீண்டகால 3000 ஆண்டு கால வரலாற்றுச் சமூக வாழ்வைக் கொண்ட கிராமம் என்ற அடையாளத்தைக் கொண்டுள்ளது.

### சம்மாந்துறையும் வீரமுனையும் இணைந்த உள்ளூராட்சி வரலாறு

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான ஆரம்ப ஆண்டுகளில், சம்மாந்துறை முஸ்லிம் பிரிவும் வீரமுனை தமிழ் பிரிவும் இணைந்து சம்மாந்துறை நகர சபை எனும் உள்ளூராட்சி அமைப்பை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. 1954ஆம் ஆண்டு சம்மாந்துறையைச் சேர்ந்த




லத்தீப் நகர சபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். வீரமுனையைச் சேர்ந்த மாணிக்கம் துணைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அந்தக் காலகட்டத்தில் இரு சமூகங்களும் ஒரே உள்ளூராட்சி அமைப்பின் கீழ் இணைந்து செயற்பட்ட வரலாற்றுப் பின்னணி இருந்தது.

ஆனால், அதே 1954ஆம் ஆண்டிலேயே இரு சமூகங்களுக்கிடையிலான உறவில் தீவிரமான முறிவு ஏற்படுத்திய வன்முறைச் சம்பவம் வீரமுனையில் இடம்பெற்றதாக வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### *1954 வீரமுனை வன்முறை*

1954ஆம் ஆண்டு தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்ட வாரத்தில், வீரமுனையைச் சேர்ந்த நகர சபை துணைத் தலைவர் மாணிக்கத்திற்கும் முஸ்லிம் கிராமத் தலைவரான சீனித்தம்பி வித்தானுக்கும் இடையில் தனிப்பட்ட தகராறு ஒன்று ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த தனிப்பட்ட முரண்பாடு பின்னர் சமூகங்களுக்கிடையிலான மோதலாக விரிவடைந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக வீரமுனை தீக்கிரையாக்கப்பட்டதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

1954ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த வன்முறை, பின்னர் பல தசாப்தங்களாக வீரமுனை எதிர்கொண்ட இனவாதத் தாக்குதல்களின் வரலாற்றுப் பின்னணியில் முக்கியமான ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது.

### *தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு உள்ளான வீரமுனை*

வீரமுனை கிராமம் பின்னர் பல்வேறு காலகட்டங்களில் இனவாதத் துன்புறுத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் இலக்கானதாகக் கூறப்படுகிறது. இதன் சமீபத்திய உதாரணங்களில் ஒன்றாக, வீரமுனையில் வரவேற்பு வளைவு கோபுரம் அமைக்க முற்பட்டபோது அது தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவம் குறிப்பிடத்தக்கது.

எனினும், வீரமுனை மக்கள் எதிர்கொண்ட மிகக் கொடூரமான காலகட்டம் 1990ஆம் ஆண்டாகும். அந்த ஆண்டில் கிராம மக்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்றதுடன், பெருமளவிலான மக்கள் கொல்லப்பட்டதாகவும், பலர் காணாமல் ஆக்கப்பட்டதாகவும், ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டதாகவும் பதிவுகள் மற்றும் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

1990ஆம் ஆண்டின் வன்முறையின் பின்னர் பல வீரமுனை மக்கள் உடுத்த உடையுடன் தங்கள் சொந்த ஊரை விட்டு அகதிகளாக வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பலர் பின்னர் வீடு திரும்பவில்லை. அவர்களில் பலநூற்றுக்கணக்கானோர் குறித்த உண்மை இன்று வரை முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் தொடர்கிறது.

### *1990 – வீரமுனையின் இரத்தம் தோய்ந்த காலம்*

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான படுகொலைகள் இடம்பெற்றன. சம்மாந்துறை, சித்தாண்டி, பொத்துவில், குட்டம்பை, கல்முனை, காரைதீவு, துறைநீலாவணை, ஏறாவூர், ஏறாவூர் வைத்தியசாலை, கோராவெளி, ஈச்சையடித்தீவு, புதுக்குடியிருப்பு, கொக்கட்டிச்சோலை உள்ளிட்ட பல இடங்களில் தமிழ் மக்கள் குறிவைத்து தாக்கப்பட்டு கொல்லப்பட்டதாக வரலாற்றுப் பதிவுகள்




தெரிவிக்கின்றன. பல கிராமங்களில் குடியிருப்புகளும் அழிக்கப்பட்டன.

இந்தப் பரந்த வன்முறைச் சூழலின் ஒரு பகுதியாகவே வீரமுனை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தமிழ் கிராமங்களில் இடம்பெற்ற தொடர் படுகொலைகளைப் பார்க்க வேண்டியுள்ளது.

வீரமுனை சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளில், இலங்கை பாதுகாப்புப் படையினருடன் இணைந்து ஊர்காவல் படையினரும் தாக்குதல்களில் ஈடுபட்டதாக உள்ளூர் சாட்சியங்கள் மற்றும் சில ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக பொறுப்புக்கூறல் முழுமையாக இடம்பெறவில்லை என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் நீண்டகால குறையாக இருந்து வருகிறது.

### வீரமுனை படுகொலைகள் – திகதி வாரியான சம்பவங்கள்

படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக வெவ்வேறு ஆவணங்களிலும் சாட்சியங்களிலும் எண்ணிக்கை மாறுபடுகின்ற போதிலும், சம்பவங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் திகதிகள் தொடர்பாக பின்வரும் பதிவுகள் முன்வைக்கப்படுகின்றன.

### 20.06.1990 – வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் கோவில் சம்பவம்


குறிப்பாக 1990 ஜூன் மாதத்தில், இந்த ஆலயத்திலும் பாடசாலையிலும் வளத்தாபிட்டி, மல்வத்தை போன்ற இடங்களில் படுகொலைகளை தொடர்ந்து காணாமல் ஆக்கப்படுவதாக ஏற்பட்ட அச்சம் காரணமாக தஞ்சம் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

20 ஜூன் 1990 அன்று இராணுவ வாகனங்கள் கோவில் வளாகத்திற்குள் வந்ததாகவும், 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களை வெளியே வருமாறு கூறியதாகவும் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.அந்த இளைஞர்கள் விசாரணைக்காக CTB பேருந்தில் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதே சம்பவம் தொடர்பான சில பதிவுகளில், சிறப்பு அதிரடிப்படையினரும் ஊர்காவல் படையினரும் இணைந்து 69 தமிழ் பொதுமக்களைப் படுகொலை செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், உயிரிழந்தோரின் எண்ணிக்கை தொடர்பாக ஆவணங்களுக்கு இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

### 29.06.1990 – மீண்டும் கைது நடவடிக்கை

ஜூன் 29ஆம் தேதி மீண்டும் கோவில் அகதி முகாமில் சோதனை மற்றும் கைது நடவடிக்கை இடம்பெற்றதாகவும், சுமார் 60 ஆண்கள்




அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களில் பலர் பின்னர் வீடு திரும்பவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கூறுகின்றன.

### 05.07.1990 – வீரமுனை

1990 ஜூலை 5ஆம் தேதி வீரமுனையில் 13 தமிழர்கள் கொல்லப்பட்டதாகப் பதிவுகள் குறிப்பிடுகின்றன.

### 10.07.1990 – வீரமுனை

ஜூலை 10ஆம் தேதி மேலும் 15 தமிழர்கள் வீரமுனையில் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த தொடர் சம்பவங்கள் காரணமாக வீரமுனை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அச்சநிலை மேலும் தீவிரமடைந்தது.

### 16.07.1990 – மல்வத்தை

ஜூலை 16ஆம் தேதி மல்வத்தையில் இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்து தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் சுமார் 30 பேர் கொண்ட குழுவினரால் எட்டு பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு பின்னர் கொல்லப்பட்டதாக உள்ளூர் சாட்சியங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கின்றன.

### 26.07.1990 – வீரமுனை இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம்

ஜூலை 26ஆம் தேதி வீரமுனையில் 23 சிறுவர்கள் உட்பட 32 இளைஞர்கள் ஊர்காவல் படையினராலும் சிறப்பு அதிரடிப்படையினராலும் கைது செய்யப்பட்டதாகவும், பின்னர் அவர்கள் காணாமல் போனதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் வீரமுனையில் ஏற்பட்ட பெருமளவிலான காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையின் முக்கியமான ஒரு பகுதியாகும்.

### 29.07.1990 – ஆசிரியர் குடும்பம் கடத்தப்பட்ட சம்பவம்

ஜூலை 29ஆம் தேதி ஒரு ஆசிரியர் தனது குடும்பத்துடன் பேருந்தில் வீரமுனையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தபோது கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான குறிப்புகளும் பின்னர் வெளிவந்த ஆவணங்களில் காணப்படுகின்றன.

### 01.08.1990 – சவளக்கடை

ஆகஸ்ட் 1ஆம் தேதி சவளக்கடையில் 18 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போனதாகக் கூறப்படுகிறது.

### 12.08.1990 – வீரமுனை அகதி முகாம் மீதான தாக்குதல்

ஆகஸ்ட் 12ஆம் தேதி வீரமுனை அகதி முகாமுக்குள் ஊர்காவல் படையினர் குழுவொன்று புகுந்து வாள்களால் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் கோவில் தர்மகர்த்தா தம்பிமுத்து சின்னத்துரை உட்பட 14 பேர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இதே காலகட்டத்தில் வீரமுனையில் மட்டும் சுமார் 600 வீடுகளும், சம்மாந்துறை,




மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி, கணபதிபுரம், மல்வத்தை உள்ளிட்ட கிராமங்களில் இருந்த 1,352 தமிழர்களின் வீடுகளும் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### *20 ஜூன் முதல் 15 ஆகஸ்ட் வரை – பெரும் அழிவு*

சில உள்ளூர் பதிவுகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில், 1990 ஜூன் 20ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 15ஆம் தேதி வரையிலான காலப்பகுதியில் வீரமுனையில் மட்டும் 232 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 1,600க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த எண்ணிக்கைகள் குறித்து வெவ்வேறு ஆவணங்களில் வேறுபாடுகள் இருக்கலாம். இருப்பினும், அந்தக் காலப்பகுதியில் வீரமுனை மற்றும் அதனைச் சுற்றியுள்ள தமிழ் கிராமங்கள் மிகப்பெரிய மனித இழப்பையும் சொத்து அழிவையும் சந்தித்தன என்பது பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களில் தொடர்ந்து வெளிப்படுகிறது.

அயல்கிராமமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஊர்காவல் படையினர் இராணுவ உதவியுடன் இந்தப் படுகொலைகளில் ஈடுபட்டதாக அந்தப் பகுதியின் சமூக சேவையாளர் தியாகராஜா குறிப்பிட்டார்.

### *கோவில்களில் தஞ்சமடைந்த மக்களும் கொடூரமான தாக்குதல்களும்*

1990ஆம் ஆண்டு வன்முறைகளின் போது வீடுகளில் தங்குவது பாதுகாப்பற்றதாக மாறியதால் பல தமிழ் மக்கள் சைவ ஆலயங்களில் தஞ்சம் புகுந்தனர். வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் கோவில் உட்பட சைவ ஆலயங்கள் அப்போது அகதிகளுக்கான தற்காலிக பாதுகாப்பிடங்களாக மாறின.

ஆனால், அந்த ஆலயங்களிலேயே தஞ்சமடைந்த மக்களும் தாக்குதல்களுக்கு உள்ளானதாகப் பாதிக்கப்பட்டோர் கூறுகின்றனர். ஊர்காவல் படையினர் வாள்களால் வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் மக்களை கொன்றதாகவும், பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கொல்லப்பட்டதாகவும், குழந்தைகள்கூட கொடூரமாகக் கொல்லப்பட்டதாகவும் நேரடி சாட்சியமான இந்த அவலத்தின் போது பாதிக்கப்பட்டு ஒரு கண் பார்வையை இழந்த நிலையிலும் இன்னும் உயிருடன் இருக்கும் ஒரு அம்மா குறிப்பிட்டார்.

கைக்குழந்தைகள் கூட இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டதாகவும், சுவர்களில் தூக்கி அடிக்கப்பட்டதாகவும் கூறப்படும் சாட்சியங்கள் இந்த வன்முறையின் கொடூரத்தைக் காட்டுகின்றன.

### *வீரமுனை படுகொலை – ஒரு கிராமத்தைத் தாண்டிய வரலாறு*

“வீரமுனை படுகொலை” என்று குறிப்பிடப்படும் சம்பவம் வீரமுனை என்ற ஒரே கிராமத்தில் நடைபெற்ற கொலைகளை மட்டும் குறிக்கவில்லை.

வீரமுனையைச் சுற்றியுள்ள மல்வத்தை, வளத்தாப்பிட்டி உள்ளிட்ட கிராமங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் படுகொலைகளும்,

காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களும், வீடுகள் அழிக்கப்பட்ட சம்பவங்களும் இந்தப் பரந்த வன்முறை வரலாற்றின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றன.

இதனால் வீரமுனை படுகொலை என்பது ஒரு தனிப்பட்ட நாளில் நடைபெற்ற ஒரு சம்பவம் அல்ல; 1990ஆம் ஆண்டு ஜூன் முதல் ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற கொலைகள், கைது நடவடிக்கைகள், காணாமல் ஆக்கங்கள், பாலியல் வன்முறைகள், அகதியாக்கம் மற்றும் சொத்து அழிவுகளைக் கொண்ட ஒரு தொடர் துயர வரலாறாகப் பார்க்கப்படுகிறது.

### அம்பாறை வைத்தியசாலையிலும் காணாமல் போனவர்கள்

இந்தப் படுகொலைச் சம்பவங்களில் காயமடைந்த பலர் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த நேரத்தில் நோயாளிகளுடன் வைத்தியசாலையில் தங்கியிருந்த குடும்ப உறுப்பினர்களை சாம்பல் நிற வாகனத்தில் வந்த சிலர் விசாரணைக்காக அழைத்துச் சென்றதாகவும், அவர்கள் பின்னர் மீண்டும் வீடு திரும்பவில்லை என்றும் மல்வத்தைப் பகுதியைச் சேர்ந்த 60 வயதைக் கடந்த பெண் ஒருவர் சாட்சியமளித்தார் .

இந்தச் சாட்சியம், வீரமுனை மற்றும் சுற்றுப்புறங்களில் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் கிராமங்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், வைத்தியசாலை போன்ற இடங்களிலும் தொடர்ந்ததாக பாதிக்கப்பட்டோர் நினைவுகூரும் ஒரு முக்கியமான விடயமாகும்.

### காணாமல் ஆக்கப்பட்டோர் – இன்னும் பதில் கிடைக்காத கேள்வி

1990ஆம் ஆண்டின் வன்முறைகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான கேள்வியே பல குடும்பங்களுக்கு




இன்று வரை விடைபெறாத துயரமாக உள்ளது.

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள், பாதுகாப்பு காரணங்களால் வீடுகளை விட்டு வெளியேறியவர்கள், கோவில் அகதி முகாம்களில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள், இளைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு பிரிவினரைப் பற்றிய காணாமல் போதல் பதிவுகள் இருப்பதாக சாட்சியங்களும் சில ஆவணங்களும் தெரிவிக்கின்றன.

1990களில் வீரமுனை கிராம உத்தியோகத்தர் உட்பட பலர் நேரடியாக சம்பவங்களை அறிந்திருந்தபோதிலும், தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தால் அவற்றை வெளிப்படையாகப் பேசுவதற்கு ஆர்வம் காட்டவில்லை எனவும் கூறப்படுகிறது.

காலம் செல்லச் செல்ல பல சாட்சிகள் மௌனமாகிவிட்டனர். சிலர் உயிரிழந்தனர். சிலர் அச்சத்துடன் வாழ்ந்தனர். இதனால் பல சம்பவங்களின் முழுமையான உண்மை இன்னும் வெளிச்சத்திற்கு வரவில்லை.

### K. N. தர்மலிங்கத்தின் பதிவு

வீரமுனை சம்பவங்கள் தொடர்பாக வெளிவந்த முக்கியமான பதிவுகளில் K. N. தர்மலிங்கம் 2003ஆம் ஆண்டு மே/ஜூன் மாதத்தில் வெளியிட்ட கட்டுரையும் குறிப்பிடத்தக்கதாகக் கூறப்படுகிறது.




அந்தக் கட்டுரையில் 1990 ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பல்வேறு இடங்களில் இருந்து இளைஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமல் போனதாகப் பதிவுகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான குறிப்புகளும் உள்ளன .

இவ்வாறான ஆவணப் பதிவுகள், உயிருடன் இருக்கும் சாட்சியங்களுடன் இணைக்கப்பட்டு ஆராயப்படும்போது, 1990ஆம் ஆண்டின் வீரமுனைச் சம்பவங்களின் முழுமையான வரலாற்றை மீள்கட்டமைப்பதற்கு முக்கிய ஆதாரங்களாக அமையக்கூடும்.

## அழிக்கப்பட்ட குடியிருப்புகளும் இடம்பெயர்ந்த மக்கள் வரலாறும்

கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் பல தலைமுறைகளாக தமிழர்கள் வாழ்ந்து வந்த கிராமங்கள் காலப்போக்கில் வன்முறை, இடம்பெயர்வு மற்றும் குடியேற்ற மாற்றங்களால் சிதைவுக்குள்ளானதாகப் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் கூறினர் .

பாலமுனை, பாணமை, மீனோடைக்கட்டு, ஒலுவில், நிந்தவூர்லி, சம்மாந்துறை, கரவாகு, தீகவாவி, மாந்தோட்டம், கொண்டாவெட்டுவான், பூரணி, செம்மணிக்குளம், தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் போன்ற இடங்கள் தமிழர்கள் வாழ்ந்த பழைய குடியிருப்புகளாகக் குறிப்பிடப்படுகின்றன.

அதேபோன்று, தமிழர்கள் வாழ்ந்தமைக்கான வரலாற்றுச் சுவடுகள் படிப்படியாக அழிக்கப்பட்டதாகக் கூறப்படும் கிராமங்களாக அட்டைப்பள்ளம், சவளக்கடை, திராய்க்கேணி, சொறிக்கல்முனை, மீராச்சோலை போன்ற இடங்களும் குறிப்பிடப்படுகின்றன.

இந்தப் பகுதிகளில் பிறந்த பல தமிழர்கள் வன்முறைகளால் தங்கள் சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, அகதி வாழ்க்கைக்கு தள்ளப்பட்டதாகவும், அவர்களின் அகதி அந்தஸ்து, சொத்து உரிமை, மீள்குடியேற்றம் மற்றும் இழப்புகளுக்கான உரிய அங்கீகாரம் இன்னும் முழுமையாக கிடைக்கவில்லை எனவும் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் கூறுகின்றனர்.

## 36 ஆண்டுகளுக்குப் பின்னரும் நீடிக்கும் நீதி கேள்வி

1990ஆம் ஆண்டிலிருந்து 36 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் வீரமுனை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இன்னும் பல கேள்விகளுக்கு பதில் கிடைக்கவில்லை.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர்? யார் கைது செய்தனர்? அவர்கள் உயிருடன் இருந்தார்களா? அவர்களின் உடல்கள் எங்கே? அவர்களுக்கு மரணச் சான்றிதழ் ஏன் கிடைக்கவில்லை? அவர்களின் குடும்பங்களுக்கு சட்டரீதியான அங்கீகாரமும் நிவாரணமும் ஏன் முழுமையாக வழங்கப்படவில்லை? - இவை பல குடும்பங்களின் தலைமுறைகளைத் தாண்டியும் தொடரும் கேள்விகளாக உள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினாலோ மனித உரிமை அமைப்புகளாலோ உரிய நீதி கிடைக்கவில்லை




என்றும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான மரணச் சான்றிதழ்கள்கூட பலருக்கு வழங்கப்படவில்லை என்றும் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்ட சமூக சேவையாளர் தாமோதரம் பிரதீபன் அளித்ததாகக் கூறப்படும் வாக்குமூலத்தின்படி, 36 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தப் படுகொலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உரிய நீதி கிடைக்காத நிலையில், அவர்களை நினைவுகூர்ந்து ஆண்டுதோறும் தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்துவதோடு மட்டுமே காலம் கடந்து செல்கிறது.

## *நினைவில் வாழும் வீரமுனை*

வீரமுனையின் வரலாறு என்பது வெறுமனே ஒரு கிராமத்தின் வரலாறு அல்ல. அது கிழக்கு இலங்கையின் பல தலைமுறை சமூக வாழ்வின் வரலாறும், இனமோதல்களால் ஏற்பட்ட இடம்பெயர்வின் வரலாறும், படுகொலைகளின் நினைவுகளும், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் குடும்பங்களின் காத்திருப்பும், நீதிக்கான நீண்ட போராட்டமும் இணைந்த வரலாறாகும்.

1954ஆம் ஆண்டின் வன்முறையிலிருந்து 1990ஆம் ஆண்டின் தொடர் படுகொலைகள் வரை, வீரமுனை பல முறை வன்முறையின் மையமாக மாறியது. 1990ஆம் ஆண்டில் மக்கள் கொல்லப்பட்டனர்; பலர் காணாமல் ஆக்கப்பட்டனர்; பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பொதுமக்கள் கொடூரமான வன்முறைக்கு உள்ளானதாக சாட்சியங்கள் கூறுகின்றன; ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன; எஞ்சிய மக்கள் அகதிகளாக வெளியேறினர்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் மீண்டும் வீரமுனையில் குடியேறி வாழத் தொடங்கினாலும், அந்த மண்ணில் நடந்தவற்றின் நினைவுகள் அழியவில்லை.

வீரமுனையின் மண்ணில் இன்று எரியும் ஒவ்வொரு நினைவு தீபமும், கொல்லப்பட்டவர்களை மட்டும் நினைவுகூர்வதல்ல; காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இன்னும் எதிர்பார்க்கும் பதிலையும், நீதி கிடைக்காத ஒரு வரலாற்றின் சாட்சியத்தையும் வெளிப்படுத்துகிறது.

36 ஆண்டுகள் கடந்தும் அந்தக் கேள்வி இன்னும் அங்கேயே உள்ளது:

வீரமுனையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அவர்களுக்கான உண்மையும் நீதியும் எப்போது வெளிப்படும்?

இந்தக் கேள்விக்கான விடை கிடைக்கும் வரை, வீரமுனையின் வரலாறு முடிவடைந்ததாகக் கருத முடியாது.


சுவிட்சர்லாந்து
எழுத்தாளர்
சண் தவராஜா
எழுதிய
சுவிஸ் தமிழ்
எழுத்தாளர்கள்
( தொகுதி 2 )
நூல் வெளியீடு
நாள்:
05-09-2026
மாலை 5.30 மணி
இடம்:
திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்
மேலரண் சாலை, திருச்சிராப்பள்ளி
வெளியீடு :
இனிய நந்தவனம்
பதிப்பகம்
சுவிஸ்
தமிழ்
எழுத்தாளர்கள்
(தொகுதி 2)
சண் தவராஜா